1 AUG 1997


# புதிய பூமி

PUTHIYAPOOMI புதிய பூமி

சுற்று 03 ஜூன் 1997 சுழற்சி 11 விலை ரூபா 10/= பக்கம் 12


### தலைநகரில் தமிழரிடம் கேட்கப்படுபவை

அடையாள அட்டையை எடு!
பொலிஸ்பதிவு இருக்கிறதா?
பாஸ் உண்டா ?
பெயர் என்ன ?
எந்த ஊர் ?
எப்பொழுது வந்தாய் ?
எப்படி வந்தாய் ?
ஏன் வந்தாய் ?
என்ன செய்கிறாய் ?
எப்பொழுது திரும்புகிறாய் ?
ஏன் இன்னும் போகவில்லை


## புலிகள் முதல் தொண்டமான் வரை

# ஒன்றுபட மறுப்பு!

**வடக்கு கிழக்கில் யுத்தம் நீடித்துச் செல்கிறது. இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது. உயிர் உடமைகள் அழிவுற்று லட்சக் கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து ஏதிலிகளாகி நிற்கின்றனர். மலையகத்தில் கம்பனிகளின் ஆதிக்கமும் அரசின் நடைமுறைகளும் மக்களை நிர்க்கதிக்கு ஆளாக்கி வருகின்றன. அங்கே பட்டினிப் பெருமூச்சுகள் கேட்க ஆரம்பித்துள்ளன, இந்நிலையிலே புலிகள் முதல் தொண்டமான் வரையான தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமக்கிடையில் ஒன்றுபட்டு அர்த்தமுள்ள நிலைப்பாடு ஒன்றினை எடுப்பதற்கு மறுத்து நிற்கும் நிலையே காணப்படுகிறது.**



இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1994 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்க் கட்சி ஒன்றின் ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மேலதிக ஆதரவுடனேயே ஆட்சி அமைத்துக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்குப் பதிலாக ஒரு மாற்று ஜனநாயக அரசாங்கமாக பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி அமையும் அன்னும் எதிர் பார்ப்பில் மக்கள் இருந்தனர். அத்தகைய சூழலில் எல்லாத் தமிழ் கட்சிகளும் இவ் அரசாங்கத்திற்குத் தத்தமது நிலையிலே ஆதரவு கொடுக்க முன் வந்தனர். தொண்டமான் முழு மந்திரிப் பதவியையும் சந்திரசேகரன் அரை மந்திரிப் பதவியையும் பெற்றுக் கொண்டனர். இன்றைய பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு மலையகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகளாக இருபத்தியேழு உறுப்பினர்கள் இருந்து வருகின்றனர். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புலிகள் இயக்கத்தையும் உள்ளடக்கிப் பார்த்தால் பத்துத் தமிழ் கட்சிகள் இன்றைய அரசியல் அரங்கிலே காணப்படுகின்றன. பாராளுமன்றத்திற்கு உள்ளே இருக்கும் ஐந்து தமிழ்க் கட்சிகளும் அரசாங் கத்தை ஆதரிப்பதுடன் இரண் கட்சிகள் அரசின் அங்கமாகியு உள்ளன. இத்தகைய நிலையில் தமிழ்க் கட்சிகள் இருந்த போதிலு ஓர் உறுதியான ஒன்றுபட்ட நிலை பாட்டைக் கொண்டிருக்க முடியாத காரணத்தால் அரசாங்கத்தை எவ் வகையிலும் நிர்ப்பந்திக்கவோ பணிய வைக்கவோ முடியாதவை யாக இருந்து வருகின்றன. பதிலுக்கு இக் கட்சிகள் ஒவ்வொன்றையும் அரசாங்கம் தனக்குச் சாதகமாக பயன்படுத்துவதில் வெற்றி கண்டுள் ளது எனலாம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என நாமம் சூட்டி அவர்களுக்கு எதிரான யத்தம் எனக் கூறித் தமிழ் மக்களுக்கு எதிராகவே யுத்தத்தை முன்னெடுத்து வருகின்றது. ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்துள்ள கட்சிகளும் புலிகள் விரோதப் போக்கில் இருந்து முடிவுகளை மேற்கொள்வதால் அதுவே அரசிற்கு சாதகமாகியும் வருகின்றது. அதேவேளை புலிகள் இயக்கம் தொடர்ந்தும் ஏனைய கட்சிகள் இயக்கங்களை நிராகரித்து துரோகிகள்



(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

### இ.தொ.கா - ஐ.தே.க : பதவிகளுக்குப் போட்டி

## காட்டிக் கொடுப்பில் கூட்டு !

சம்பள உயர்வைப் பெறவோ இந்திய பாஸ்போர்ட் பெற்ற 94 ஆயிரம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெறவோ போராட்டங்களை நடத்த விரும்பாத இ.தொ.கா, பறிக்கப்பட்ட ஊவாமாகாண கல்வி அமைச்சை மீளப் பெறப் போராட்டங்களை நடத்த வேண்டும் என விரும்பியது. மலையக மக்கள் அதற்குப் பலியாகவில்லை.

இ.தொ.காவைச் சேர்ந்த எம்.சச்சிதானந்தனிடம் தமிழ் கல்வி, உல்லாசப்பயணம், வர்த்தக அமைச்சுகள் கொடுக்கப்பட்டிருந்தன. உள்ளூராட்சிச் சபை தேர்தல்களில் இ.தொ.கா தோல்வியடைந்ததை அடுத்து அவரிடமிருந்து தமிழ்கல்வி அமைச்சை முதலமைச்சர் பறித்துக் கொண்டார்.

அதனை மீளப்பெறுவற்காக இ.தொ.கா சகலவிதமான முயற்சிகளையும் எடுத்தது. ஒன்றும் வெற்றியளிக்கவில்லை. ஊவாமாகாண கல்வி அமைச்சு உத்தியோக பூர்வமாக முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். பறிக்கப்பட்ட அமைச்சை மீளக் கொடுப்பதில்லை என்பதில் ஐ.தே.கட்சியினரும், முதலமைச்சரும் விடாப்பிடியாக இருந்து விட்டனர்.

பறிக்கப்பட்ட தமிழ் கல்வி அமைச்சை மீள ஒப்படைக்கும்படி கேட்டு மலையக மக்களை வேலைநிறுத்தங்களில் ஈடுபடும்படியும், ஊர்வலங்களை நடத்தும்படியும் இ.தொ.கா. தூண்டியது. மக்களிடமிருந்து சாதகமாக சமிக்ஞைகள் கிடைக்கவில்லை. வேலை நிறுத்தம் செய்யும், ஊர்வலம் நடத்தும் விருப்பத்தை இ.தொ.கா கைவிட்டது.

பறிக்கப்பட்ட அமைச்சை மீளக் கொடுக்கக்கூடாது என்று கோரி ஊர்வலம் நடத்த வேலாயுதம் ஏற்பாடு செய்தார். இவர் ஐ.தே.கட்சியின் தொழிற் சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர். ஊவா மாகாணசபை உறுப்பினர்.

இ.தொ.கா. பிரமுகர்கள் மட்டுமன்றி வேலாயுதம் கூட பதவிக்காக ஊர்வலம் நடத்தவும், வேலைநிறுத்தம் செய்யவுமே மக்களை தூண்டினார். மலைய மக்களின் உரிமைகளை கேட்டு ஒரு ஊர்வலம் கூட செய்யத் துணிவில்லாத, வக்கில்லாத இ.தொ.காவும், ஐ.தே.காவும் தங்களது பதவிக்காக மக்களைப் பலியாக்கவே விரும்புகின்றனர்.

பதவிக்கான போராட்டத்தில் எதிரும் புதிருமாக இருக்கும் இ.தொ.காவும் ஐ.தே.காவும் தொழிலாளர்களை சுரண்டும் முதலாளிமார் சம்மேளனத்திற்கு கைகட்சி வாய்பொத்தி சேவகம் செய்வதில் ஒற்றுமையாகவே இருக்கின்றன. இரண்டு வருடங்களுக்கு சம்பள உயர்வை கேட்க மாட்டோம் என்றும் கொடுக்கப்பட வேண்டிய 8 ரூபாய் சம்பள உயர்வையும் கேட்க மாட்டோம் என்றும் தோட்டத் தொழிலாளர்கள் சார்பில்

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

### தோல்வியடைந்தவர்களுக்கு 'கசிப்பு' விற்க அனுமதி

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியடைந்த பொ.ஐ.ஐ. முன்னணியின் அபேட்சகர்கள் சிலரும் அவர்களுக்கு நிதியுதவி செய்தவர்களும் எவ்விதத் தடையுமின்றி கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை கைது செய்யவோ, அவர்களின் கசிப்பு விற்பனையை தடுக்கவோ பொலீசார் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று ஆளும்கட்சியின் அதிகாரம் கொண்ட அரசியல்வாதிகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். இது இரத்தினபுரி மாவட்டத்தில் நடப்பதாக அறியமுடிகிறது.

### ஊர்காவல் படையினராக ஆசிரியர்கள்

ஊர்காவற் படைவீரர்களாகவும் ரிசேர்ப் பொலிஸ் அலுவலர்களாகவும் கடமையாற்றக் கூடிய வகையில் வடமத்திய மாகாண சபை 935 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கவிருக்கிறது. ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படும் இவர்கள் தேவை ஏற்படும்போது பொலிஸ் சேவையிலும், ஊர்காவல் படை சேவையிலும் இயங்க வேண்டும். இவர்களின் மாதாந்த சம்பளம் ரூபா 3000/=. வடமத்திய மாகாண மாணவர்களின் கல்வி வளர்க.

### தொழிலாளர் சாசனம் யாருக்குத்தேவை?

சும்மா இருந்து கொண்டு சம்பளம் வாங்குபவர்களே தொழிலாளர் சாசனத்தை நடைமுறைப்படுத்தும்படி கேட்கிறார்கள். இவ்வாறு இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க யுக்திய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களால் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு சும்மா இருந்து கொண்டு சாசனம் தேவைப்படாது என்பதையும் அந்த அதிகாரிகள் தொழிலாளர்கள் இல்லை என்பதையும் அபிவிருத்திக் கல்வியில் பட்டம் பெற்ற அமைச்சர் அறியமாட்டாரா?

### விவசாயிகள் தற்கொலை

விவசாய நாடான இலங்கையின் தமது உற்பத்திகளுக்கு தகுந்த விலை கிடைக்காமையினால் நஷ்டமடைந்த விவசாயிகளில் சிலர் விரக்தியால் தற்கொலைகளில் ஈடுபட முன்வந்துள்ளனர். அண்மையில் கலாவெவ பகுதியில் ஒரு இளம் விவசாயி தற்கொலை செய்து கொண்டார். கந்தளாய் குள நீர் தமக்கு கிடைக்கவில்லை எனப்பத்து விவசாயிகள் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

## எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் வெலிஓயா

வடமாகாணத்தின் வவுனியா அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியே மணலாறு. தமிழ் மக்களின் பாரம்பரிய குடியிருப்புகள் கொண்ட இப்பகுதி அமைந்திருப்பது வடகிழக்கின் நிலத் தொடர்பின் நடுப்பகுதியிலாகும். வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்னும் வற்புறுத்தலும் தமிழீழக் கோரிக்கையும் எழுந்த கையோடு மணலாற்றை வெலிஓயாவாக மாற்றும் பேரினவாதத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1979 ம் ஆண்டு அன்றைய காணி அமைச்சராக இருந்த காலஞ்சென்ற காமினி திசநாயக்கவின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்பிரதேசத்தில் இருந்த தமிழ்க் குடிகள் அகற்றப்பட்டன. அதேவேளை கென்பாம் டொலர் சிலோன் தியேட்டேஸ் போன்றவை அமைந்திருந்த நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு நாளாந்தம் விஸ்தரிக்கப்பட்டன. இவற்றின் ஊடாகவே தற்போதைய ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை நெடுங்கேணி வரை நடாத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை வவுனியா அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த மணலாறு (வெலிஓயா) தற்போது தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றப்பட்டு அதனை அனுராதபுரம் அரசாங்க அதிபரின் கீழ் கொண்டு வர அரசாங்கம் அவசர அவசரமாக முடிவெடுத்துள்ளது. இதற்கு தற்காலிக நடவடிக்கை என்று ஒரு சாட்டுக் கூறப்படுகிறது. ஆனால் இது தொடரப்படும் திட்டமிட்ட நடவடிக்கையின் மற்றொரு கட்டமாகும். வெலிஓயா (மணலாறு) ஏற்கனவே இனப்பிரச்சினையில் எரியும் மையப்பகுதியாக இருந்து வருகிறது. இதற்கு தற்போது நிர்வாகரீதியில் மேலும் எண்ணெய் ஊற்றப்படுகிறது. இது இனப்பிரச்சினையைத் தீர்க்கும் செயல் முறையல்ல. யுத்தத்தை விஸ்தரித்துச் செல்லும் ஒன்றேயாகும்.

## ஷெல் கம்பெனி படுத்தும்பாடு!

தற்பொழுது நாடெங்கும் காஸுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அரசாங்கத்திடமிருந்து ஷெல் கம்பெனிக்கு காஸ் கம்பெனி கொடுக்கப்பட்ட பிற்கு மூன்று தடவைகள் விலை அதிகரிக்கப்பட்டது. இன்று மக்களுக்கு தேவையான காஸ் பாவனைக்கு கிடைப்பதில்லை.

தனியாருக்கு கொடுக்கப்பட்டதால் விலை அதிகரிப்பும் தட்டுப்பாடுமே மக்களுக்கு கிடைத்த நன்மைகளாகும்.

காஸ் கம்பெனி அரசாங்கத்திடம் இருக்கும்போது தட்டுப்பாடு நிலவினாலோ, விலை அதிகரிக்கப்பட்டாலோ எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. அவ்வெதிர்ப்புகளை அரசாங்கம் கவனத்தில் எடுக்கத் தவறியதில்லை.

ஆனால் தட்டுப்பாடு பற்றியோ, விலை அதிகரிப்பு பற்றியோ இன்று எதிர்ப்புகள் காட்டப்படுவதுமில்லை. காட்டப்பட்டாலும் கவனத்தில் எடுக்கப்படப் போவதுமில்லை. ஷெல் கம்பெனி காஸ் பாவனையாளர்களை விரும்பியவாறு ஆட்டிப்படைக்கிறது. ஷெல் கம்பெனியை கட்டுப்படுத்துவாரோ கேட்பாரோ யாரும் இல்லை.

இது இவ்வாறிருக்க விமானங்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஷெல் கம்பெனியிடம் ஒப்படைத்துள்ளது. இறுதியில் எல்லாம் எங்கு போய் முடியுமோ?

## அல்பேனியாவில் நடப்பதென்ன?

அல்பேனியாவில் மக்கள் ஆயுதம் ஏந்தி அரசாங்க துடுப்புகளையும், அரச நிலைகளையும் தாக்கி வருகின்றனர். ஜனாதிபதி சாளி பெறிஷ்ஷாவின் ஆட்சிக்கு எதிராகவே மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கத்தின் போலியான முதலீட்டுத் திட்டங்களில் தேசிய சொத்துக்களை ஜனாதிபதி கொள்ளையடித்துள்ளார் என்றும் நாட்டில் வறுமை தலைவிரித்தாடுவதாகவும் அதனால் அவர் பதவி விலக வேண்டும் என்பதே அல்பேனியா மக்களின் போராட்டத்தின் கோரிக்கையாக இருக்கிறது.

ஜனாதிபதி சாளி பெறிஷ்ஷா அரசாங்கத்தை கலைத்து விட்டு அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி அவரின் பாதுகாப்பை பலப்படுத்திக் கொண்டுள்ளார். இவருக்கு ஆதரவான அமெரிக்காவையும், ஐரோப்பிய நாடுகளையும் அல்பேனிய கிளர்ச்சி நடவடிக்கைகள் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. அந்நாடுகள் அல்பேனியாவில் சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும் அவை அல்பேனியா முழுவதும் சிவில் யுத்தத்தில் மூழ்குவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

சாளி பெறிஷ்ஷா பதவி இறக்கப்படும் வரை தற்போதைய கிளர்ச்சி நடவடிக்கைகள் தொடரும் என்றே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அன்வர் ஹோஷாவின் தலைமையிலான அல்பேனிய சோஷலிஸ அரசாங்கத்தை விமர்சித்த அல்பேனிய புத்திஜீவிகள் தற்போதைய நிலையை விட அவ்வரசாங்கம் எவ்வளவோ மேலானது என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் அல்பேனியா தற்போதைய குழப்பிய நிலையிலிருந்து மீள்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

## சிலநேரங்களில் சில மனிதர்கள் சில சஞ்சிகைகள்

1978 இல் ''லங்கா கார்டியன்'' என்ற ஆங்கிலச் சஞ்சிகை (மாதம் இருமுறை) வெளிவரத் தொடங்கியது. அதன் ஆசிரியரும் உரிமையாளருமான இருந்தவர் மேர்வின் டி சில்வா. ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாக பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்ற இவர், மாணவர்களிடையே ''அண்டயா'' என்ற பட்டப் பெயரைப் பெற்றிருந்தார். ''அண்டி அறுப்பவன்'' என்ற பொருளில் இப்பட்டப் பெயர் அப்பொழுது வழங்கியது.

பட்டதாரி மாணவனாக இருக்கும் போதே ஏரிக்கரைப் பத்திரிகைகளுக்கு இவர் கிண்டல் சுவை மிக்க பந்திகளை எழுதி வந்தார். ஆதலால், பட்டதாரியாக அவர் பேராதனையிலிருந்து வெளியேறியதும், அவர் ஏரிக்கரை நடத்திய ''ஒப்சேர்வரில்'' முழுநேர பத்திரிகையாளனாகச் சேர்ந்ததில் ஆச்சிரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அங்கு அவரது பத்திரிகைத் திறமைகள் புடமிடப்பட்டன.

பத்திரிகைத் துறையில் நல்ல அனுபவம் பெற்ற இவர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி ஒரு சில மாதங்களுக்குப் பின்னர் 'லங்கா கார்டியனைத் தொடங்கிய போது, இவர் என்ன, ''லைன்னை'' கடைப்பிடிப்பார் என்பது குறித்து எல்லோரும் ஆவலாய் இருந்தனர். இதற்கு ஒரு காரணமும் இருந்தது. 1970 இல் சிறிமாவின் தலைமையின் இடதுசாரிக் கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், மேர்வின் ஏரிக்கரையின் பிரதான பத்திரிகையான ''டெய்லி நியூ''சின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவர் கனதியான ஆசிரியத் தலையங்களைத் தீட்டியதோடு, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவின் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் முக்கிய பரப்புரையாளனாகவும் விளங்கினார். பின்னர் என்ன நடந்ததோ தெரியவில்லை திடீரென ஒருநாள் சிறிமா அம்மையார் இவருக்குச் சீட்டை கிழித்தார்.

இந்தப் பின்னணியில் ''லங்கா கார்டியன்'' வெளிவரத் தொடங்கியதும், அது முற்று முழுதாக சுதந்திரக் கட்சிக்கு எதிரான ஓர் சஞ்சிகையாகத் திகழும் எனப் பலர் எதிர்பார்த்தனர். 1971 ஆம் ஆண்டில் தெற்கிலே ஏற்பட்ட கிளர்ச்சி மிகக் கொடூரமாக ஒடுக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்து றெஜீ சிறிவர்தனா ஆரம்ப இதழ்களிலே எழுதிய போது, இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் ஒன்றாகவே அக்கட்டுரை இருந்தது.

ஆனால் மேர்வின் மிகக் கெட்டிக்காரன். (கெட்டிக்காரன் எப்பொழுதும் கொள்கைப் பற்றுடையவனாக இருக்க வேண்டும் என்ற நியதி ஏதுமில்லை.) ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் -கொள்ளைகள் என்றாலும் பொருந்தும் -நாட்டிலே ஒருவகை அமைதியின்மையை ஏற்படுத்த தொடங்கியதும், நாட்டின் நாடி கைப்பிடித்துப் பார்ப்பதில் கைதேர்ந்த மேர்வின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சாடும் கட்டுரைகளை வெளியிடத் தொடங்கினார். என்னைப் பொறுத்தவரை, இக்கால கட்டத்திலே வெளிவந்த இதழ்களே மிகப் பெறுமதியானவை.

தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து வந்த இக்கால கட்டத்திலேதான் மேர்வினின் மகன் தயான் ஜயத்திலக்க கேள்வி பதில் வடிவத்திலே தேசிய இனப்பிரச்சினை பற்றி மார்க்சிய கண்ணோட்டத்தோடு மிக ஆணித்தரமாக தமிழரின் சுயநிர்ணய உரிமையையும் அதை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டத்தையும் வலியுறுத்தினார்.

ஆனால் இன்றோ -தேய்பிறை வளர்பிறை ஆவதற்கு முன் - நிலைமை தலை கீழ் எனத்தான் கூறவேண்டும். செப்டம்பர் 1996 ஆம் ஆண்டிலிருந்து மேர்வின் தன்னைப் பிரதம ஆசிரியராக உயர்த்திக் கொண்டு, தனது மகன் தயானை ஆசிரியராக நியமித்திருக்கிறார். இதனை வம்சத்தைப் பேணும் ஓர் நடவடிக்கையாகவும் கொள்ளலாம்.

புதிய ஆசிரியர் வருகையோடு புறத்தோற்றம் மாறியது. அச்சகமும் மாறியது. 18 ஆண்டுகளாக, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வந்த இச்சஞ்சிகை இப்பொழுது தொழில் நுட்பக் காரணங்களுக்காகவோ என்னவோ வேறு ஒரு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றது. இந்த மாற்றங்கள் செய்யப்படுவது தவிர்க்க இயலாததாய் இருக்கலாம். ஆனால் சஞ்சிகையின் உள்ளடக்கத்திற்கும், தயானுக்கும் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் தான் எமக்கு வேதனையளிக்கின்றன.

அன்று தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காக குரல் எழுப்பி பின்னர் சிறிது காலம் வரதராஜப் பெருமாளின் மாகாண சபையில் அமைச்சராக இருந்த தயான், இன்று பச்சை இனவாதக்கும் சிங்களப் பேரினவாதியாக மாறிவிட்டார். தமிழரின் கைகளில் மேலும் மேலும் அடிவாங்குவதை இனியும் சிங்கள இனம் பொறுக்காது என்ற தொனிபட அவர் ஒரு நூலையே எழுதியிருக்கின்றார்.

இத்தகைய மனமாற்றத்தின் விளைவு இவர் ஆசிரியராகப் பொறுப்பேற்ற பின்பு, லங்கா கார்டியனிலும் தெரிகின்றது. அண்மையில் அதில் வெளியிடப்பட்ட கட்டுரைகளிலே, ஜே.ஆர்.தான் இயக்கவியலின் அவதாரம் என்றெல்லாம் தயான் துதிபாடுகின்றார். பிரமேதாசாவிற்கும் விஜயகுமாரதுங்கவினதும், ரிச்சேர்ட்டி சொய்சாவினதும் படுகொலைகளுக்கும் எதுவித தொடர்புமில்லை என எண்பிக்கத் தயான் படாதபாடு படுகின்றார். புதிய மார்க்சீய சிந்தனையாளனாகவும் அவர் அதேசமயம் காட்டிக் கொள்ளத் தவறுவதில்லை. இத்தகைய முரண்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ள தயான், தந்தைக்கு ஏற்ற தனயனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள விழைகின்றாரோ?

★ வெளியான் ★

நன்றி: தாயகம் 33 வது இதழ்

### தேயிலை றப்பர் தென்னை உற்பத்தி வீழ்ச்சி

கடந்த வருடம் முதல் பகுதியில் 59.2 மில்லியன் கிலோ கிராம் தேயிலையும், 29.2 மில்லியன் கிலோ கிராம் றப்பரும் 626.5 மில்லியன் தேங்காய்யும் உற்பத்தி செய்யப்பட்டன.

இவ்வருட முதல் பகுதியில் தேயிலை உற்பத்தி 54.6 மில்லியன் கிலோ கிராமாகவும், றப்பர் 27.6 மில்லியன் கிலோ கிராமாகவும் தேங்காய் 614.1 மில்லியனாகவும் குறைந்துள்ளன.

### வடக்கில் காணாமல்போனோர்

1995 -96 ல் யாழ் -குடாநாடு இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட பின்பு இதுவரை காணாமல் போனோரின் எண்ணிக்கை 850 தைத் தாண்டியுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இவ் அமைப்புகள் காணாமல் போனோரைக் கண்டு பிடிப்பதற்கான பல்வேறு முயற்சிகளில் இராணுவ சிவில் அதிகாரிகள் மூலம் தொடர்பு கொண்டு செயலாற்றி வருகின்றனர்.

### யுத்தத்தை எதிர்த்து பிக்கட்டிங் !

புதிய ஜனநாயக கட்சி, நவசமசமாஜக் கட்சி, தியேச கல்வி வட்டம், மாக்சிச தொழிலாளர் போக்கு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ பிரிவு) சோஷலிஸ மக்கள் கட்சி உட்பட 14 இடதுசாரி அமைப்புகளின் ஏற்பாட்டில் யுத்தத்தை எதிர்த்து பிக்கட்டிங் இயக்கம் யூன் 5 ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெறும்.

யுத்தத்தை நிறுத்து! தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வை உடனே நடைமுறைப்படுத்து! என்ற கோரிக்கைகளை முன்வைத்தும் தனியார்மயத்தை எதிர்த்தும் மேற்படி பிக்கட்டிங் இயக்கம் நடத்தப்படவுள்ளது.

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844

## அச்சுறுத்தும் உணவுப் பஞ்சம்

2005 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் உணவுப்பஞ்சம் ஏற்படப் போவதாக எச்சரிக்கை செய்யப்படுகிறது. இதுபற்றி இலங்கையின் அரச தொலைக்காட்சியான ரூபவாஹினியில் ஒரு விளம்பரம் ஒளிபரப்பப்படுகிறது. அது உலக உணவு ஸ்தாபனத்தின் அறிவுறுத்தலின் பேரில் ஒளிபரப்பப்படுகிறது. உணவு தட்டுப்பாடு நிலவாத போதும் தற்போது பெருந்தோட்டப் பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் மக்கள் மூன்று வேளையும் ஒழுங்காக சாப்பிடுகிறார்கள் என்று கூறமுடியாது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்வதன் காரணமாக உணவு தட்டுப்பாடும் நிலவும் சூழ்நிலையில் கஷ்டப்படுவது போன்று இன்றும் மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

அதிகளவுப் பணம் வடக்கு கிழக்கு யுத்தத்தில் செலவழிக்கப்படுகிறது. யுத்தம் காரணமாக நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியின் உணவுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதிகளவு நெல்லை உற்பத்தி செய்யும் கிழக்கு மாகாணம் யுத்தத்தின் பிடிக்குள் மாட்டுப்பட்டுள்ளது.

கோதுமை மா, அரிசி என்பன மட்டுமன்றி உபஉணவுப் பொருட்களும் மரக்கறிகளும் கூட இறக்குமதி செய்யப்படுகிறது. அதனால் நம்நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு தகுந்த விலை கிடைப்பதில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உள்நாட்டு உற்பத்தி செலவை விட குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. பசளை கிருமிநாசினி போன்றவற்றின் தொடர்ச்சியான விலை அதிகரிப்பால் நம்நாட்டு விவசாயிகள் குறைந்த செலவில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாதிருக்கின்றனர்.

நம்நாட்டு விவசாயத்துறையிலும் பல்தேசியக் கம்பெனிகளின் ஆதிக்கம் நிலைநாட்டப்படுகிறது. உணவு உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயி பல்தேசிய கம்பெனிகளில் பிடிக்குள் மாட்டுப்படுவதைத் தவிர வேறு வழி இருப்பதாக தெரியவில்லை. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள விவசாயக் கம்பெனிகளின் பிடிக்குள் மெல்லமெல்ல இந்நாட்டு நீர்வளமும், விவசாய நிலங்களும் சென்று கொண்டிருக்கின்றன. நீரையும், நிலத்தையும் பல்தேசிய கம்பெனிகளிடம் தாரை வார்த்து விட்டு நம்நாட்டு விவசாயிகள் அனைவரும் இறுதியில் பல்தேசிய கம்பெனிகளின் கூலி விவசாயிகளாக மாற வேண்டிய நிலையே ஏற்படும்.

மீன்பிடித் தொழிலும் பல்தேசிய கம்பெனிகளின் ஏகபோகத்திற்குள்ளாகி விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மீன்பிடித்தொழில் திருத்தச் சட்டத்தின்படி நம்நாட்டு மீனவர்கள் செய்துவரும் கரையோர மீன்பிடியையும் பல்தேசியக் கம்பெனிகள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பல்தேசியக் கம்பெனிகளுடன் போட்டி போட முடியாது. நம்நாட்டு மீனவர்கள் இறுதியில் பல்தேசியக் கம்பெனிகளின் கூலிகளாக மாறவேண்டிய நிலையே ஏற்படும்.

இந்நிலையில் 'தனியொருவனுக்கு உணவில்லையெனின் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியாரின் கவிதை அடிகளை உச்சரித்தால் பயங்கரவாதிகள் என்ற பேரில் சிறையில் அடைக்கப்படலாம். எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு கண்ணீர்ப்புகையாலும் துப்பாக்கிக் குண்டுகளாலும் பொலிஸ் அடக்குமுறைகளாலும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

எனவே 'அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு விதியில்லாவிடினும் பல்தேசியக் கம்பெனிகளுக்கு பணிய மறவோம்' என்று யாராவது பாடினால் அவருக்கு தேசிய விருது மட்டுமன்றி சர்வதேச நோபல் பரிசு கூட கிடைக்கலாம்.

இவ்வாறான சூழ்நிலையில் 2005 ஆம் ஆண்டில் ஏற்படப்போகும் உணவு தட்டுப்பாட்டை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம். உலக உணவு ஸ்தாபனத்தின் வற்புறுத்தலின் பேரில் தொலைக்காட்சியில் விளம்பரம் போடுவதால் மட்டும் உணவுப் பஞ்சத்திற்கு முகம் கொடுக்க முடியுமா?

உணவு உற்பத்தியில் உள்நாட்டில் தன்னிறைவை காண்பதற்கான அர்த்தமுள்ள திட்டங்களை வகுத்து அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். யுத்தத்தை நிறுத்தி அதற்காக செலவிடும் பெருந்தொகைப் பணத்தையும் உணவு உற்பத்திக்காக செலவிட வேண்டும். சிக்கனமான நம்நாட்டு உணவுப் பண்பாட்டை திட்டமிட்ட ரீதியில் கட்டி வளர்க்க வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமும், பல்தேசியக் கம்பெனிகளிடமும் எமது விவசாயத்துறையை தாரைவார்க்கும் திட்டங்களை கைவிடவேண்டும். இல்லாவிட்டால் இலங்கை இன்னொரு எத்தியோப்பியாவாக, ருவாண்டாவாக, ஸயராக மாறுவதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

# எச்சரிக்கை



சர்வாதிகார ஆட்சி நடைபெறுவதாலேயே தென்கொரியாவும், மலேசியாவும் பொருளாதார வளர்ச்சியை கண்டுள்ளன. இப்படி கூறியவர் வேறு யாருமல்ல. ஐ.தே. கட்சி ஆட்சி காலத்தில் நடைபெற்ற ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத அடக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்து தன்னை ஒரு இடதுசாரி என்று கூறவும் தவறாத, தற்போது ஜனாதிபதியாக இருக்கும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கவே இப்படி கூறினார்.

மிரிஹானை இளைஞர் நிலையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்படி கூறியுள்ளார். 'சர்வாதிகார ஆட்சியை நடத்துவதனாலேயே தென்கொரியா, மலேசியா போன்ற தென்னாசியா நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. அந்நாடுகளில் ஒரே அரசியல் கட்சியே இருக்கிறது. ஒரேயொரு பத்திரிகை, ஒரேயொரு வானொலியே இருக்கின்றன. அங்கு தொழிற்சங்க உரிமை இல்லை.

அந்நாடுகளில் வேலைநிறுத்தங்கள் அடக்கி வைக்கப்படுகின்றன. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர் என்றெல்லாம் அவர் கூறியுள்ளார்.

ஒரு ஜனநாயக வாதியாக காட்டிக் கொண்டு இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கையேற்ற சந்திரிகாவின் மேற்படி பேச்சு அவரை ஆதரித்த கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் பெரிய அதிர்ச்சியை கொடுத்துள்ளது. மறுபுறம் அவரை தெரிவு செய்த மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகவும் அப்பேச்சு அமைந்துள்ளது.

தென்கொரியாவிலும் மலேசியாவிலும் தனிமனித சுதந்திரம், பேச்சு, எழுத்துச் சுதந்திரம் தொழிற்சங்க உரிமை உட்பட சகல ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. அதற்காக குரல் கொடுப்பவர்கள் கடுமையாக அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். உரிமைப் போராட்டங்கள் நசுக்கப்படுகின்றன. போராட முன்வருபவர்கள் கொன்று குவிக்கப்படுகின்றனர். இவ்வளவுக்கு மத்தியிலும் தான் சந்தைப் பொருளாதாரத்தில் அவை பிரதான இடத்தை வகிப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன என்ற ஒரேயொரு காரணதுக்காக அந்நாடுகளின் ஆட்சிகளை மெச்சிப் பேசுகின்ற சந்திரிகாவின் நிலைபாடு தான் என்ன?

சர்வாதிகாரத் தன்மை கொண்ட நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைக்கப் போவதாக மக்களிடம் வாக்குறுதியளித்தவர் எமது ஜனாதிபதி. 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதியுடன் தற்போதைய ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்கப் போவதாக கூறினார். 1996 யூலையிலும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவில்லை. 15 ஆம் திகதி நெருங்கிக் கொண்டிருக்கும் போது தென்கொரியா, மலேசியா சர்வாதிகார ஆட்சிகளை புகழ்ந்து பேசியிருப்பதன் அர்த்தம் தான் என்ன?

நிறைவேற்று அதிகாரத்தை நிலைநாட்டிய ஜே.ஆரை விட பிரேமதாஸாவை விட சந்திரிகா மிகவும் வேகமாக சர்வாதிகாரப் பாதையில் செல்லப் போகிறார் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவித்திருக்கிறார் என்றே அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டுவதற்கோ, யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கோ அன்றி ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டவும், யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை காணவுமே மக்கள் திருமதி சந்திரிகாவிடம் ஆட்சிப் பொறுப்பை கையளித்தனர். ஆட்சிப் பொறுப்பை கையளித்து சில மாதங்களுக்கு பின்னர் யுத்தத்தை தொடங்கினார். சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக யுத்தம் என்ற பேரில் யுத்தம் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இதனால் ஏற்படுகின்ற உயிர் அழிவு பற்றி எவ்விதத்திலும் கவலைப்படுவதாக இல்லை.

இரண்டு வருடங்களுக்கு பின்னர் தற்போது சர்வாதிகாரத்தை போற்றுகிறார். சர்வாதிகாரியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் மக்கள் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த ஆணையை வழங்கவில்லை என்பதையும் உலகில் சர்வாதிகாரிகளின் விதிகள் எப்படி அமைந்தன என்பதையும் மறந்து விடலாகாது. தற்காலிகமாக சர்வாதிகாரிகளுக்கு வெற்றிகள் கிட்டினாலும் இறுதியில் நாட்டை விட்டே ஓட வேண்டிய நிலைக்கே அவர்கள் தள்ளப்பட்டார்கள் என்பது தெரியாத விடயங்களல்ல.

அன்று பிலிப்பைன்ஸிலிருந்து மார்க்கோஸ் ஓடியதும் இன்று ஸயரிலிருந்து மொபுட்டு ஓடியதும் சர்வாதிகாரிகளின் கடைசி அத்தியாயம் எப்படி எழுதப்படும் என்பதற்கு நல்ல பாடங்களாகும். சர்வாதிகாரிகளாக இருந்தவர்கள் மக்களை கொன்று குவித்தது மட்டுமன்றி பலவிதமான மோசடிகளுக்கும் ஆளாகியிருந்தனர்.

ஒருவேளை சாப்பாட்டிற்கு வழியில்லாத அப்பாவி மக்களை நசுக்கிக் கொண்டு தென்கொரியாவை ஆண்ட இரண்டு ஜனாதிபதிகள் மோசடியாகச் சொத்துக்களை சேர்த்து படாடோபமாக வாழ்ந்தனர். அதற்காக இருவரும் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். ஸயர் நாட்டு மக்களும், குழந்தைகளும் உண்ண உணவின்றி செத்து மடிகின்ற அதேவேளையில் 250கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான சொத்துக்களை மொபுட்டு தன் வசம் வைத்திருந்தார்.

பிரான்ஸில் 40 லட்சம் அமெரிக்க டாலர் பெறுமதியான வீடொன்றும் பெல்ஜியத்தில் ஒரு கோடியே 10 லட்சம் அமெரிக்க டாலர் பெறுமதியான வீடொன்றும் மொபுட்டுவிற்கு சொந்தமாக இருக்கின்றன.

இவ்வாறான ஒரு ஜனாதிபதியாக மாறப் போவதாக சந்திரிகா அறிவித்துள்ளாரா? அதனை இந்நாட்டு மக்கள் ஏற்று அங்கீகரித்து விடுவார்களா? அபிவிருத்தி என்ற பேரில் சகலவிதமான உரிமைகளும் மறுக்கப்பட்டர்களாக கொலை செய்யப்படுபவர்களாக பசிபட்டினியில் வாழ்பவர்களாக மக்கள் இருக்க, அதிகாரம் செறிந்த படாடோபமான வாழ்க்கையை கொண்ட ஒரு தனிநபரின் ஆட்சியை இலங்கை மக்கள் அனுமதிப்பார்களா?

17 வருட ஐ.தே.கட்சி ஆட்சியை மக்கள் மாற்றியமைத்தார்கள். 1970-77 இல் சிறிதளவாவது சர்வாதிகாரம் வேண்டும் என்று கூறி அன்றைய அரசாங்கம் மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுக்க ஒரு காரணமாயிருந்தார் பிலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்க. அந்நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை தெரிவித்து அன்றைய அரசாங்கத்தை மக்கள் தோற்கடித்தனர். இவை எமது நாட்டில் சர்வாதிகாரத்திற்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இனப்பிரச்சினை தொடர்பாகவும் கூட அவ்வப்போது பல விடயங்களை பேசிவிட்டு பின்னர் மேலோட்டமாக வாபஸ் வாங்குவதும் பேசவில்லை என்று மறுப்பதும் எமக்கு தெரிந்த விடயங்களே. அதற்கு சப்பை கட்டுவது போன்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிடுவதும் வழமை.

எனவே மிரிஹானையில் பேசிய இந்தப் பேச்சு தொடர்பாக ஜனாதிபதி என்ன கூறப்போகிறார்? வாபஸ் வாங்குவாரா? மறுப்பாரா? அல்லது சர்வாதிகாரியாகும் அவரின் உள்நோக்கத்தை தொடர்வாரா?

- விமுக்தி -

# குட்டிச் சுவராகி நிற்கும் வடக்கின் பொருளாதாரம்



எழுபதுகளின் நடுக் கூறிலே இடதுசாரிக் கட்சி ஒன்றின் தலைவர் ஏரிக்கரைப் பத்திரிகை ஒன்றில் இனப்பிரச்சினை பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் வடக்கின் பொருளாதாரத்தை மணி ஓடர் பொருளாதாரம் எனச் சுட்டிக் காட்டியிருந்தார். அவருக்கு முன்பும் சிலர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தமைக்குக் காரணமும் இருக்கத்தான் செய்தது. ஒன்று வடக்கின் நீர்நில வளத்தின் குறைவும் சீதோஷ்ண நிலையின் தன்மையுமாகும். இரண்டாவது கொலனித்துவக் காலம் தொட்டே வடக்கைச் சேர்ந்தோரின் பெரும் பகுதி உழைப்பு வடக்கிற்கு வெளியே அமைந்திருந்தது என்பதாகும். மலேசியா சிங்கப்பூரில் சம்பாதித்தோரும் தென்னிலங்கையில் அரசாங்க தனியார்துறையில் மட்டுமன்றி வர்த்தகத்திலும் ஈடுபட்டோரின் தொகையாலும் அன்றைய சூழலில் வடக்கின் பொருளாதாரம் மணி ஓடர் பொருளாதாரமாக இருந்தது உண்மையே. ஆனால் மேற் கூறிய இடதுசாரிக் கட்சித் தலைவர் எழுதிய மணிஓடர் பொருளாதாரம் என்னும் கூற்று அன்றைய நிலையில் ஒரு வாதப் பிரதிவாதத்தைத் தோற்றுவித்து விட்டது. வடக்கின் பொருளாதாரம் மணி ஓடர் பொருளாதாரம் அல்ல அது ஒரு தேசிய இனத்தின் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதும் நீடித்து வளரக் கூடியதுமான பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது. இக் கட்டுரையின் நோக்கம் மேற்குறித்த வாதத்தை முன்னெடுப்பது அல்ல. மாறாக வடக்கின் பொருளாதாரம் இன்று எந்தளவு நிலைக்குக் கீழிறங்கி குட்டிச் சுவராகி நிற்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும்.

எழுபதுகளின் நடுக் கூறிலே வடக்கின் பொருளாதாரம் மணிஓடர் பொருளாதார நிலைக்குப் போட்டியாகப் பலமுனைகளில் வளர்ந்திருந்தது. அன்று இன்று இருப்பது போன்று வெளிநாட்டு பணவருவாய்க்கான எந்த வழியும் இருக்கவில்லை. அத்துடன் தென்னிலங்கையில் அரசாங்க தனியார் துறை உத்தியோக தொழில் வாய்ப்புகளும் குறைவடைந்து கொண்டே சென்றது. அதே போன்று தெற்கின் வர்த்தக வியாபார சூழலும் வடக்கில் உள்ளவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கவில்லை. இதற்கு வளர்ந்து வந்த சிங்கள தேசியவாதத்துடன் இனவாத வளர்ச்சிகளும் அவற்றுக்கு சாதகமான ஆளும் வர்க்க சூழல்களும் பக்க பலமாகக் காணப்பட்டன. இந்நிலையில் படித்து வந்த இளைஞர்கள் மத்தியில் விவசாயத்தின் மீதான நிர்ப்பந்த சூழல் ஒன்று உருவாகியது. அதற்கு அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளும் உதவி புரிந்தன. இறக்குமதியில் பின்பற்றப்பட்ட கட்டுப்பாடுகளும் உள்ளூர் உற்பத்தியில் காட்டப்பட்ட அதீத அக்கறைகளும் வடக்கில் முழு மூச்சுடன் முன்னெடுக்கப்பட்டன. குடாநாட்டிற்குள்ளும் அதற்கு வெளியே வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் உப உணவு வகைகளும் பரந்து பயிரிடப்பட்டன. நெல் உற்பத்தி விரிவு படுத்தப்பட்டது. வடக்கின் சீதோஷ்ண நிலையில் விளைவிக்கப்பட முடியாதவை என்று ஒரு காலத்தில் கற்பனை பண்ணப் பட்ட பழமுந்திரிகை வெற்றிகரமாக பயிரிடப்பட்டு சிறந்த அறுவடையைப் பெற்றது. குளிர் பிரதேசப் பயிர்களான லீக்ஸ், கரட், பெரிய வெங்காயம், போஞ்சி, பீற்றூட், முள்ளங்கி போன்றவற்றை வடபகுதி விவசாயிகள் ஆச்சரியம் தரும் வகையில் அமோக உற்பத்தியாக்கி சாதனை படைத்தனர். வன்னி நிலப்பரப்பில் விசுவமடு, முத்தையன் கட்டுக் குளங்களை யொட்டிய படித்த விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு போட்டி போட்டு விவசாய உற்பத்திகள் முன்னெடுக்கப்பட்டன. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் விவசாய உற்பத்தியானது என்றுமில்லாத வகையில் உயர் மட்டத்தை எட்டி நின்றன. உற்பத்தியானவை யாவும் உடனுக்குடன் தென்னிலங்கையின் சந்தைகளுக்கு இடையூறின்றி விநியோகம் பெற்று நியாயமான விலைகளுக்கு விற்கப்பட்டன. நூற்றுக் கணக்கான லொறிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் ஏனைய வடக்கின் நகரங்களில் இருந்தும் கொழும்பு கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அதேபோன்று நூற்றுக்கணக்கில் லொறிகள் வடக்கின் நகரங்களுக்கு வந்து கொண்டிருந்தன. விவசாய உற்பத்தி மட்டுமன்றி மீன்பிடித் தொழில் வளர்ச்சி பெற்று ஐஸ் பெட்டிகளில் தெற்கு நோக்கி எடுத்துவரப்பட்டன. இவை மட்டுமன்றி கண்ணாடித் தொழிற்சாலைகள், அலுமீனியத் தொழிற்சாலைகள் பலரக உற்பத்திகளில் ஈடுபட்டன. இவற்றுடன் கைத்தறி நெசவுத் தொழில் குடிசைக் கைத் தொழிலாகவும் தொழிற்சாலைத் தொழில்களாகவும் விருத்தி பெற்றுக் காணப்பட்டன. இக்கால கட்டம் வடக்கின் பொருளாதாரத்தின் பொற்காலம் என அழைக்கப்படும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருந்தது.

இத்தகைய வடக்கின் பொருளாதார வளர்ச்சி காரணமாக விவசாயிகளில் பலர் தமது சொந்த உழைப்பில் கல்வீடுகளைக் கட்டிக் கொள்ள முடிந்தது. குத்தகை நிலங்களில் குடியிருந்தவர்களும் விவசாயம் செய்தவர்களும் சிறு அளவில் தானும் காணிகளைச் சொந்தமாக வாங்கிக் கொண்டனர். 1970 -77 காலகட்டத்தில் வடக்கின் பொருளாதாரம் ஒரு திட்டவட்டமான வடிவத்தைப் பெற்றுக் கொண்டதுடன் தேசிய இனத்தின் வளர்ச்சிக்கான ஒரு பொருளாதாரமாகவும் காட்சி கொடுத்தது. ஆனால் நம்பிக்கையோடும் கடின உழைப்போடும் முன்னெடுக்கப்பட்டு வந்த அப் பொருளாதாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் வரவால் சிதைந்து சின்னாபின்னப்படுத்தப் பட்டது. அதற்கான இரண்டு அம்சங்களை ஐக்கிய தேசியக் கட்சி முன் தள்ளியது. ஒன்று அது கடைப்பிடிக்க ஆரம்பித்த திறந்த பொருளாதாரக் கொள்கை. இரண்டாவது தமிழர் மீதான இனவாதத்தை பேரினவாதமாக்கி ராணுவ ஒடுக்குமுறையாக முன்னெடுத்தமை. இவ்விரண்டு போக்கின் தங்கு தடையற்ற வளர்ச்சியானது முழுத் தமிழர்களையும் அவர்களது பொருளாதாரத்தையும் சிதைவுக்கு உள்ளாக்கியது. வடக்கின் பொருளாதாரம் குறிப்பாக அதன் அடித்தளத்தை இழக்கும் நிலைக்கு உள்ளாகியது. வளர்ந்து வந்த தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு ஜே.ஆர். -ஐ.தே.கட்சி அரசாங்கம் மேற்கொண்ட பல வழி முறைகளில் பொருளாதாரத்தை முடக்கி அழிக்கும் வழி முறையைப் பிரதானமாகக் கொண்டது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் வடக்கின் உற்பத்திகள் யாவும் செயலிழந்தன. விவசாயம் சிறுகைத்தொழில்கள் அனைத்தும் கைவிடப்பட்டன. அவற்றை மேன்மேலும் பாழடிப்பது போன்று ராணுவ ஒடுக்குமுறையும் யுத்த நிலைகளும் வளர்க்கப்பட்டன. பொருளாதாரத் தடைகளும் போக்குவரத்துச் சீர்குலைவுகளும் ஏற்படுத்தப்பட்டன. இந்நிலையில் வடக்கில் இருந்து குறிப்பாக இளம் வயதினர் நாட்டை விட்டு வெளியில் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டனர். அகதிகள் என்னும் பெயரில் ஆயிரம் ஆயிரமாக இளைஞர்கள் யுவதிகள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று தஞ்சமடைந்தனர். ஒரு பகுதியினர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் தேடிச் சென்றனர். இவ்வாறு வெளிநாடுகளுக்கு வடக்கில் இருந்து சென்றவர்களின் தொகை சுமார் நான்கு லட்சம் எனக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு வெளி உலகுக்குச் சென்றவர்களின் உழைப்பின் மூலமாகவே இன்றைய வடக்கின் மக்கள் பட்டினிச் சாவு என்ற ஆபிரிக்கப் பாணி நிலையில் இருந்து தவறியவர்களாக இருக்க முடிகிறது. அன்று விவாதத்திற்கு உள்ளான மணிஓடர் பொருளாதாரம் என்பது இன்று எதிர்வாதத்திற்கு இடமில்லாத வெளிநாட்டு உண்டியல் பொருளாதாரமாகக் காணப்படுகிறது.



இன்று வடக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட பகுதியாகக் காணப்படுகிறது. குடாநாடு முற்று முழுதான இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. வன்னிப் பெருநிலப் பரப்பின் சிற்சில பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. தற்போது எஞ்சியுள்ள பகுதிகளையும் நோக்கி ராணுவத் தாக்குதல்கள் தொடர்கின்றன. இந்நிலையில் வடக்கின் பொருளாதாரம் பலமுறைகளாலும் அழிவுற்றுக் காணப்படுகிறது. குறிப்பாக விவசாயம் வெறும் பெயரளவிற்கான ஒன்றாகவே இருந்து வருகின்றது. வடபகுதிக்குள் குறிப்பாக குடாநாட்டிற்குள் செய்யப்படும் விவசாயத்தினால் விவசாயிகள் எவ்வித பலாபலன்களையும் பெற முடியாதவர்களாகி உள்ளனர். மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது உற்பத்தியும் சந்தைப்படுத்தலுமாகும். உற்பத்தியாகும் சகல விவசாய உற்பத்திகளும் குடாநாட்டிற்குள் தான் சந்தைப் படுத்த முடிகிறதே தவிர அதற்கு அப்பால் அல்ல. அதனால் விவசாயிகள் நல்ல விலையைப் பெறமுடியாது தமது முதலீட்டை ஒவ்வொரு தடவையும் இழந்து ஓட்டாண்டியாகி வரும் நிலைதான் காணப்படுகிறது.

உதாரணமாக ராணுவம் குடாநாட்டைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின் விவசாயிகளுக்கு அரசாங்கம் இலவசமாக ஐந்நூறு கிலோ விதை வெங்காயத்தை வழங்கியது. அதற்குரிய உரப்பசளை, மண்ணெண்னை ஆகியனவற்றையும் குறைந்த விலைக்குக் கொடுத்தது. அதனைப் பெற்ற விவசாயிகள் மிகுந்த உற்சாகத்துடன் வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டு நல்ல விளைச்சலையும் அடைந்தனர். ஆனால் அறுவடை செய்த வெங்காயத்தை எங்கே சந்தைப்படுத்துவது என்பது பெரும் பிரச்சினையாகியது. ஒரு கிலோ வெங்காயம் ரூபா இரண்டுக்கு விற்பனையாகிறது. ஆகக் கூடியது பத்து ரூபாவிற்கு மேல் செல்லவில்லை. இதேபோன்றே அரசாங்கம் விதை உருளைக்கிழங்கை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகித்தது. ஆனால் உற்பத்தி செய்து அறுவடை செய்தபின் கிலோ பத்துப் பதினைந்து ரூபாவிற்கே விற்க முடிந்தது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்தனர். அரசாங்கமும் - ராணுவ நிர்வாகமும் விவசாயிகளுக்கு உதவுவது போல நடந்து அவர்களை மீளாக் கடன்காரர்களாக்கிய கதைதான் வடக்கில் விவசாயிகளிடையே காணப்படுகின்றது.

வடக்கின் வளமுள்ள விவசாய நிலங்கள் பல இன்று ராணுவப் பாவனையின் கீழ் இருந்து வருகின்றன. கண்ணி வெடிகள் மிதி வெடிகள் நிரம்பிய நிலங்களாக அவை காணப்படுகின்றன. காவலரண்கள் மண் அரண்கள் என்பவற்றுடன் ராணுவத்தின் பயற்சிக்கான மைதானங்களாகவும் கூட விவசாய நிலங்கள் இருந்து வருகின்றன. நாளாந்தம் விவசாயிகள் தமது தோட்டங்களில் வயல்களில் மிதி வெடிகளினால் கால்களை இழந்து வருகின்றமை குடாநாட்டில் சர்வ சாதாரணமாகி உள்ளது. இதுவரை குடாநாட்டில் இருநூறுக்கு மேற்பட்ட விவசாயிகள் கடந்த ஒரு வருடத்திற்குள் கால்களை மிதி வெடிகளின் மூலம் இழந்துள்ளனர்.

அரசாங்கமும் ராணுவ நிர்வாகமும் எவ்வளவுக்கு வடக்கின் விவசாயப் பொருளாதாரத்திற்கு உதவுவதாகக் கூறிக் கொண்டாலும் அங்கு உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் ஒழுங்குபடுத்தப்படாதவரை எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. சந்தைப்படுத்தலுக்கு போக்குவரத்து ஒரு பெரிய தடைக் கல்லாகும். அது நீங்கினாலும் கூட மிகப் பெரிய அச்சுறுத்தல் இன்றைய அரசாங்கமும் பின்பற்றி வரும் திறந்த பொருளாதாரக் கொள்கையாகும். வட மத்திய, மத்திய மாகாண விவசாயிகளே தமது மிளகாய் வெங்காயத்தை இன்று நல்ல விலைக்கு விற்க முடியாது இறக்குமதியால் சாகடிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறெனில் வடக்கின் விவசாய உற்பத்தியானது எவ்வாறு மீளமைப்பைப் பெற முடியம். யாவற்றுக்கும் மேலாக இன்றைய யுத்தம் முதலிலே முடிவுக்கு கொண்டுவர வேண்டும். சமாதானமும் இயல்பு வாழ்க்கையும் தோற்றுவிக்கப்படாதவரை குட்டிச் சுவராகி நிற்கும் வடக்கின் பொருளாதாரத்தை எவ்வகையாலும் மீளமைக்க முடியாது என்பதே உண்மை நிலையாகும்.

ஆனால் இன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடம் வடக்கு விவசாயிகள் ஆரம்பத்தில் கடந்த கால நடைமுறைகளின் மூலம் சில சாதகமான எதிர்பார்ப்புகளை எதிர்பார்த்தனர். அவற்றில் எதுவும் அரசாங்கத்தினால் ஈடேற்றப்படவில்லை. பதிலுக்கு முன்னைய ஆட்சியினரின் பாதையில் தான் பயணம் தொடரப்படுகிறது. அவ்வாறெனில் எவ்வாறு வடக்கின் பொருளதாரத்தை அரசாங்கம் தனது ஆளுகையின் கீழ் முன்னெடுக்க முடியும் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. இவ்விடத்திலே தமிழ் மக்கள் தமது தேசிய இன விடுதலைப் போராட்டத்துடன் தாராள பொருளாதாரக் கொள்கை தனியார் மயம் என்பனவற்றுக்கு எதிராகவும் தென் இலங்கை மக்களுடன் ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியமாகின்றது. அத்தகைய போராட்டத்தின் மூலமே அழிவுற்ற நிலையில் உள்ள வடக்கின் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர முடியும்.

- அ.பூபதி -

யாழ்ப்பாணம்



# எங்கள் மண்டபம்

இது ஒரு பாடசாலை மண்டபத்தின் பெயர். பெரும்பாலும் அரசியல் வாதிகள் அவர்களின் மனைவிமார், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பெயரையே பாடசாலை மண்டபங்களுக்கு வைப்பார்கள். அட்டன் பகுதியிலுள்ள வெலிங்டன் தமிழ் வித்தியாலயத்தில் இருக்கும் மண்டபத்திற்கே 'எங்கள் மண்டபம்' என்று பெயரிட்டுள்ளது.

அந்தோனிமலை, கபாலமலை ஆகிய தோட்டங்களுக்கான பாடசாலையே வெலிங்டன் தமிழ் வித்தியாலயம். தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் சிரமதானத்தின் மூலம் இராப்பகலாக இந்த பாடசாலைக்கென ஒரு மண்டபத்தை அமைத்தனர். தேயிலை தொழிற்சாலையின் பகுதியாக இருந்த இப்பாடசாலைக்கென அம் மண்டபத்தை கட்டினர். 60'X 20' பரப்பளவு கொண்டதாக அமைநத மண்டபம். கல், மண் என்பவற்றை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு மேடையும் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் கடுமையான உழைப்பால் அமைக்கப்படடு கொண்டிருந்ததை கண்ட G.T.Z என்ற ஜேர்மன் நிறுவனமும் தோட்ட நிர்வாகமும் சில உதவிகளை வழங்கின.

கடந்த வருடம் இம்மண்டபம் அமைக்கப்பட்டது. நீண்டநாட்களாக 5 ஆம் வகுப்பு வரை மட்டும் கல்வி கற்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் 5 ஆம் வகுப்புக்கு மேலும் வகுப்புகளை நடத்த தொழிலாளர்கள், ஆசிரியாகள், அதிபர் ஆகியோர் ஒன்றிணைந்து அனுமதியை பெற்றனர். 5 ஆம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கு 10 கிலோ மீற்றர் தூரம் நடந்து நகரப் பாடசாலைக்கு போக வேண்டியிருக்கிறது.

நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டும் என்பதாலும், வருடத்தில் அதிகமான நாட்கள் அடைமழை பெய்யும் பகுதியென்பதாலும் நகரப்பாடசாலைக்கு செல்வோரின் தொகை விரல்விட்டு எண்ணக் கூடியதாகவே இருந்தது.

க.பொ.த. சாதாரண தர வகுப்பு வரை கற்பிக்கப்பட வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்பினாலும் அதற்கான ஆகக் குறைந்தளவு வசதிகளும் இங்கிலலை.

வசதிகள் இல்லாதிருந்தாலும் 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1994 ஆம் ஆண்டில் எம் பிரபுகலா என்பவரும் சித்தியடைநதார்.

1995 ஆம் ஆண்டில் 50 சதவீதமானோர் சித்தியடைந்தனர். பவானி ஆர்.அழகேஸ்வரி, ஜீ.சொனாளி, எஸ்.சுதர்ஷனி ஆகியோர் சித்தியடைந்தனர். 1996 75 சதவிதமானோர் சித்தியடைந்தனர். வி.ஜெயசீலன், த.ரேபேக்கா, சி.சசிதரன் என்போரோ சித்தியடைந்தனர்.

இப்பாடசாலை மாணவர்களின் நாடகம் 1996 இல மத்திய மாகாணத்தில் சிறந்த நாடகமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

# ஒரு பகிரங்க கடிதம்

அன்புள்ள அதிபர்களே, ஆசிரியர்களே, இலக்கியவாதிகளே

எதிர்வரும் வருடத்திலிருந்து சுதந்திரமான தமிழ் தினப் போட்டியொன்றை முடியுமெனின் தேசிய மட்டத்திலும் இல்லையெனில் தற்போதைக்கு மாகாண மட்டத்திலேனும் இடம் பெறச் செய்ய வேண்டும். மாணவர்களின் உண்மையான கலையார்வம், காலத்துக்குத் தேவையான இலக்கிய வடிவம் போன்றவை தொடர்பாக அக்கறை காட்டுபவர்கள் பலர் இக்கருத்தினை ஏற்று அங்கீகரித்துள்ளனர். சுதந்திரமான தமிழ் தினப்போட்டிகளை நடத்த வேண்டியதன் அவசியத்தை பலர் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளனர்.

1. ஒரு சிலரை திருப்தி செய்வதற்காகவே தமிழ் தினப் போட்டி ஒழுங்குகள் விடயங்கள் அமைக்கப்படுகின்றன.
2. யாரோ ஒரு தலைவரின் மனத்தை பாதித்து விட்டது என்பதற்காக சமூக நாடகம் என்ற பகுதி நீக்கப்பட்டு விட்டது.
3. இலக்கிய நாடகம் என்று ஒரு பகுதி இவ்வருடம் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் காணப்படுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள பகுதிகளில் கூட பல பாடசாலைகள் நாடகத்தை தயாரிக்கவில்லை. காரணம் அரசியல் பூச்சாண்டித்தனம் தான்.

   குசேலர் கதையை மேடையேற்றினால் நாட்டில் பஞ்சம் இருப்பதாக கூறி அரசாங்கத்திற்கு எதிராக நாடகம் போட்டதாக வந்து விடும். இந்த 'அறிவு கெட்ட பயல்கள்' இலக்கியத்தைக் கூட அப்படித்தான் எடுத்துக் கோள்வார்கள்.

   கலித்தோகையில் வரும் பின்வரும் கவிதையை வைத்து நாடகம் போட்டால் என்னாகும் என்பன சற்று யோசித்துப் பாருங்கள்.

   ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை பண்பு என்பது பாடு அறிந்து ஒழுகுதல் அன்பு என்பது கிளை சொறாமை அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் செறிவு எனப்படுவது கூறியது; மாறாமை நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல் பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

   இதை 'நமது அறிவுசால்' தலைவர்கள் அறிந்தால், சங்க நூல்களையும் தடை செய்துவிடுவர்.

3. அம்மா பசிக்கிறது என்று வந்தால் அது நமது பெரியம்மாவை குறிப்பதாகக் கொள்ளப்படும். மலையகத்தைப் பொறுத்தமட்டில் தாத்தா, பேரன், அண்ணை, தம்பி, மச்சான், மச்சி என்ற உறவு முறையில் வரக் கூடியதாக நாடக வில்லுப்பாட்டு வசனம் எழுத முடியாது. எல்லாமே புனிதர்களை குறிப்பதாக விடும்.
4. சரி மேடையில் ஏறி, ஒன்றும் பேசாது நின்றால், மாணவர் உட்பட சகலரும் போலிசுக்கு தான் போக வேண்டிவரும். நாட்டில் என்ன பேச்சு உரிமை இல்லையா? என்று கேட்டு பிறகு ஆசிரியர் இடமாற்றம், துன்பங்கள்.
5. இவ்வருட சுற்று நிருபத்தைப் பார்த்ததால் தமிழ்தின போட்டி என்பது மாணவர்களுக்கு ஒரு வேதனையான அனுபவத்தை தருவதாகவே உள்ளது. பாரதி, பாரதிதாசன் போன்றோர் கைவிடப்பட்டுள்ளனர். மருத நிலக் காட்சியை பேச்சுக்காகத் தெரிவு செய்தவர்கள், மலையக காட்சியை பேச்சுக்கு தெரிவு செய்ய பயந்துவிட்டனர் போலும். காலப் போக்கில் குறிஞ்சி என்ற பகுதியே இலங்கையைப் பொறுத்தமட்டில் நிராகரிக்கப்பட்டு விடும் போல் தெரிகின்றது.

ாவே நண்பர்களே இந்த 'தமிழ் தடியர்களின்' ஏனத் தினத்தை இன்னும் நாம் பொறுத்துக் ாண்டு, ஏற்று அங்கீகரிக்க வேண்டுமா?

எவே பிரதேச, மாகாண மட்டத்தில் சுதந்திரமான தமிழ்தின போட்டியை நடாத்த சகலரும், ன்வர வேண்டும். இதை அம்பகமுவ, நுவரெலியா விலப்பலின், கோத்மலை, பதுளை, ண்டாரவளை, பலாங்கோடை போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் ஏற்று ரவேற்றுள்ளனர். இதை எதிர்காலத்தில் நன்கு திட்டமிட்டு சிறப்பாக்க அனைவரும் கூட்டாக ணைந்து செயற்பட அழைப்பு விடுகின்றோம்.

ஆசிரியர்கள்
எஸ்.நடேசன்
என்.சுப்பிரமணியம்

# மலையக மாணவனின் டயறி

எஸ்.உதயசூரியன்

21.04.97 - 25.04.97

திங்கள் இரண்டாம் தவணை ஆரம்பமாகியது. ஆசிரியர்கள் லீவு முடிந்து திரும்பாமையால் பாடங்கள் நடக்கவில்லை. காலையிலிருந்து விளையாடினோம். நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது. புதன் வகுப்பைக் கூட்டி சுத்தம் செய்தோம். வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் சமயப் பாடம் மட்டும் நடந்தது. வெள்ளியன்று சரியான மழை நனைந்து கொண்டு வீடு சென்றேன்.

28.04.97 - 2.05.97

திங்கள் கிழமை, தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் நடைபெற்றன. செவ்வாயன்று காலை கூட்டம் நடைபெற்றது. புதன் கிழமை எல்லோரும் கட்டாயம் பாடசாலைக்கு வர வேண்டும் என்றும் நன்கு குளித்து யூனிபோம் எல்லாம் கழுவி 'அயன் பண்ணி' போட்டு வரச் சொன்னார்கள். ஒவ்வொருவரும் மூன்று பூக்களேனும் கொண்டு வரவேண்டும் என்று பெரிய சேர் கூறினார். நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது. புதனன்று எல்லோரும் வரிசையாக டவுனுக்குப் போனோம். நாங்கள் கொண்டு சென்ற பூக்களை எல்லாம் சேர்த்து 5 மாலைகள் கட்டியிருந்தார்கள். அவை பெரிதாக இருந்தன. பெரிய வகுப்பு அக்காமார்கள் அவற்றை எவர்சில்வர் தட்டுக்களில் வைத்து கொண்டு வந்தார்கள். எங்கள் பகுதி பிரதேச சபை காரியாலயத்தின் முன்னால் வரிசையாக நின்றோம். பலபேர் கையைக் கட்டிக் கொண்டு நின்றார்கள். டை கட்டியிருந்தார்கள். அங்கு நின்றவர்களில் மூன்று பேர் கல்வியதிகாரிகள் என்று முரளி சேர் கூறினார். அக்காமாரும், அண்ணன்மாரும் வரிசையாக நின்று ட்ரம் வாசித்தார்கள்' பத்துப் பதினைந்து பேர் ஜீப்பில் வந்து இறங்கினார்கள். ''வாழ்க, வாழ்க'' என்று எல்லோரும் கத்தினார்கள். நாங்கள் கைதட்டினோம். பலமாக தட்டச் சொல்லி பெரிய சேர் சொன்னார். வந்தவர்களின் கழுத்தில் நாங்கள் கொண்டு வந்த மாலைகள் கிடந்தன. எனக்குப் பசியாக இருந்தது. அங்கிருந்து நேரடியாக வீட்டுக்குப் போனோம். இன்று என்ன படித்தீர்கள் என்று அம்மா கேட்டார். நிறைய படித்தோம் என்று உண்மையும் பொய்யும் கலந்து கூறினேன்.

மேதினத்தன்று அம்மாவுடன் வீட்டிலிருந்தேன். சாப்பாடு பார்சல் கொடுக்கிறார்கள். சல்லி கொடுக்காமல் வாகனத்தில் போய் வரலாம் என்று ஆண்டித் தலைவர் கூறிய போதும் அம்மா போகவில்லை. வெள்ளி நான் பாடசாலைக்குப் போகவில்லை.

05.05.97 - 09.05.97

திங்கள் தமிழ் பாடம் நடைபெற்றது. செவ்வாயன்று பெரிய வகுப்பு அண்ணன் ஒருவர் வந்து பெரிய சேவல் ஒன்று கரும்பலகையில் வரைந்தார். எல்லோரும் பார்த்து வரைந்தோம். வரைந்த சேவலை வெட்டி கறியாக்கி சாப்பிடுங்கள் என்று 'ஜோக்காக' கூறிவிட்டு போனார். புதன், வியாழன் கணித பாடமும் சமயப் பாடமும் இடம் பெற்றது. வெள்ளி சாயிபாவா பஜனை இடம் பெற்றது.

12.05.97 - 16.05.97

திங்கள் இந்த ஆண்டில் முதன் முதலாக ஆங்கிலப் பாடம் இடம் பெற்றது. பெரிய வகுப்பு அண்ணா ஏ.பி.சி எழுதிக் காட்டினார். செவ்வாய் கிரிக்கட் விளையாடினோம். என்னை முதல் போலிலேயே போல்ட் ஆக்கிவிட்டான் ரவி. அவனை மூன்று ரன்னிலேயே நான் அவுட்டாக்கி விட்டேன். புதன், வியாழன், வெள்ளி தமிழ் தினப் போட்டிகள் நடைபெற்றன. எங்களுக்கு லீவு விடப்பட்டது.

19.05.97 - 24.05.97

திங்கள் இலவச சீருடை வழங்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது. அம்மா இன்று வேலைக்குப் போகவில்லை. என்னோடு பாடசாலைக்கு வந்தார். காலை ஒன்பது மணிக்கு வைபவம் ஆரம்பமாகியது. பிரதேச சபை உறுப்பினர்கள் தொடர்ந்து பேசினார்கள். அம்மா கொக்காகோலா வாங்கி தந்தார். இரண்டு மணிக்கு சீருடை துணி கிடைத்தது. செவ்வாயன்று பாடசாலை செல்லவில்லை. அம்மாவுக்கு சுகமில்லை. புதன், வியாழன் வெசாக் விடுமுறை அட்டனுக்கு. வெசாக் தோரணம் பார்க்க இராமஜயம் மாமாவுடன் போனேன். வெள்ளியன்று ஐந்து பேர் மட்டுமே பாடசாலைக்கு வந்திருந்தனர். நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது.

# மலைநாட்டு கிழங்கு உற்பத்தியாளர் எதிர்ப்பு

மலைநாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்பவர்கள் கொழும்பு துறைமுகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை செய்வதற்கு முஸ்தீபுகளை செய்வதாக தெரிகிறது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. உள்நாட்டில் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்வதற்கு செலவாகும் தொகையை விட குறைந்த விலைக்கே இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு விற்கப்படுகிறது. இதனால் உருளைக்கிழங்கு செய்வோர் பாதிப்படைந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து உருளைக் கிழங்கு இறக்குமதி செய்வதை நிறுத்தும்படி கோரி பாதிக்கப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வோர் நுவரெலியாவில் கூட்டங்களையும், பிக்கட்டிங் இயக்கங்களையும் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

ஆனால் இறக்குமதி நிறுத்தப்படவும் இல்லை. உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கிழங்கிற்கு நட்டம் ஏற்படாதவாறு நல்ல விலை கிடைப்பதாகவும் இல்லை.

உள்நாட்டு உற்பத்தியை பாதிக்கச் செய்து ஏகபோகத்தை நிலைநாட்டுவதற்காக இறக்குமதி செய்யப்படும் எந்தப் பொருளும் ஆரம்பத்தில் குறைந்த விலைக்கே விற்கப்படுவது வழமை. ஏகபோகத்தை நிலைநாட்டி உள்நாட்டு உற்பத்தியை முறியடித்த பிறகு உள்நாட்டு கிழங்கு விற்கப்பட்ட விலையை விட இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கு விற்கப்படும்.

இந்த நிலைமை தவிர்க்க வேண்டுமானால் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். கிழங்கு உற்பத்திச் செலவு குறையும் விதத்தில் உரம், கிருமி நாசினி என்பவற்றின் விலை, குறைவாக இருக்க வேண்டும்.

எனவே உள்நாட்டு கிழங்கு உற்பத்தியை பாதிக்கும் கிழங்கு இறக்குமதியை நிறுத்தும்படி கோரி கொழும்பு துறைமுகத்திற்கு முன்னால் பிக்கட்டிங் ஆர்ப்பாட்டமொன்றை செய்ய நுவரெலியாவைச் சேர்ந்த கிழங்கு உற்பத்தியாளர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அறிய முடிகிறது.

## வன்னிப்போர் :

# சமாதானத்தைக் கொண்டுவருமா?

கடந்த ஒரு வருட காலமாகத் தயாரிப்புகள் செய்யப்பட்டதும் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டதுமான வன்னி நோக்கிய போர் கடந்த மே மாதம் பதின் மூன்றாம் திகதி காலையில் தொடங்கப்பட்டது. மூன்று முனைகளில் இருந்து முன்னேறுவது எனக் கூறப்பட்ட போதிலும் வவுனியா நொச்சி மோட்டையில் இருந்தும் வெலிஓயாவில் இருந்துமே படையணிகள் முன்நோக்கி நகர்த்தப்பட்டன. கடுமையான பீரங்கி ஷெல் வான் வழித் தாக்குதல்களுக்கு மத்தியிலேயே ராணுவம் தமது நகர்வை நடாத்தியது. நொச்சிமோட்டையில் இருந்து வவுனியா - யாழ்ப்பாணம் பிரதான வீதி வழியாகவும் வெலிஓயாவில் இருந்து காட்டுப் பகுதிகள் ஊடாகவும் முன்னேறிய இவ் இராணுவ நடவடிக்கைக்கு 'ஜயசிக்குறு' (வெற்றி நிச்சயம்) எனப் பெயரிடப்பட்டிருந்தது. புலிகள் இயக்கத்தின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட ராணுவம் வெசாக் தினத்திற்கு முன்பு பிரதான வீதி முனையில் ஓமந்தையையும் காட்டு வழி முனையில் நெடுங்கேணியையும் கைப்பற்றினார்கள். இரு தரப்பும் கடுமையான இழப்புக்களைச் சந்தித்துக் கொண்ட அதேவேளை பரவலான விமானக் குண்டு வீச்சுகளினாலும் நீண்டதூர ஷெல் அடிகளாலும் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டும் காயங்கள் அடைந்தும் உள்ளனர். அதேவேளை வன்னிப் பகுதியில் ஏற்கனவே குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்த மக்கள் உட்பட வன்னிப் பகுதி மக்கள் இடம் இடமாக இடம் பெயர்ந்து அலைந்து கொண்டும் உள்ளனர். இன்று வன்னியின் மூன்று மாவட்டங்களான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் என்பனவற்றின் பெரும் பகுதி நிலப்பரப்பும் அதன் மக்கள் தொகையும் வடக்கில் இருந்தும் தெற்கில் இருந்தும் முற்றுகையிடப்பட்ட நிலையில் தான் இருந்து வருகின்றது. இந் நிலையில் வன்னிக்கான பாதைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. எவ்வித போக்குவரத்தும் அனுமதிக்கப்படவில்லை. உணவு மருந்து வகைகள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை. போர் அனர்த்தங்கள் மத்தியில் வன்னியில் உள்ள மக்கள் உணவு, மருந்து, இருப்பிட வசதிகள் அற்று காடுகளில் மரங்களின் கீழ் வாழ்ந்து வரும் அவல நிலை தொடர்கின்றது. மக்கள் படும் இப் பயங்கரத் துன்பங்கள் துயரங்கள் பற்றி அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் அரசாங்க உயர் மட்டத்திற்கு அறிவித்தபடியே உள்ளனர். நிவாரணம் அனுப்பிவைக்குமாறு மீண்டும் மீண்டும் கோரிக்கை விட்டு வருகின்றனர். அதேபோன்று அரசார்பற்ற நிறுவனங்கள் வன்னிப் பகுதிக்கு உணவு, மருந்து எடுத்துச் செல்லத் தாம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ள போதிலும் அரசாங்கம் எதையும் காதில் விழுத்துவதாக இல்லை. மக்கள் எக்கேடு கெட்டாலும் பிரச்சினை இல்லை வன்னிப் போரை முன்னெடுத்துச் செல்வதிலேயே குறியாக இருக்கிறது.

அரசாங்கம் முன்னெடுத்து நிற்கும் இவ் வன்னிப் போர் எதற்காக நடாத்தப்படுகிறது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பொதுவாகவே ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துவரும் வடக்கு கிழக்குப் போர் சமாதானத்திற்கான போர் என்றே கூறி வருகிறது. 1995 -96 ஆண்டுகளில் வடக்கே குடாநாட்டிலும் அதற்கு அப்பால் கிளிநொச்சி வரையிலும் நடாத்தப்பட்ட போர்கள் யாவும் சமாதானத்திற்கான போர் என்றே கூறப்பட்டது. அதேபோன்று கிழக்கில் அவ்வப்போது ஒவ்வொரு பெயர்களில் நடாத்தப்படும் ராணுவ நடவடிக்கைகள் யாவும் சமாதானத்திற்கானவை என்றே அழைக்கப்படுகின்றன. ஏற்கனவே இடம் பெற்ற போர்களினால் யாழ் குடாநாடு, கிளிநொச்சியின் ஒரு பகுதி, மன்னார் தீவு உட்பட வேறும் சில பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய பெயர் மீட்கப்பட்ட பிரதேசங்கள் என்பதாகும். ஆனால் அவ்வாறு மீட்கப்பட்ட பிரதேசங்களின் நிலை எவ்வாறு இன்று உள்ளது என்பதே முக்கியமானதாகும். அங்கு சிவில் நிர்வாகமோ இயல்பு வாழ்க்கையோ ஏற்படவில்லை. அங்குள்ள ஒவ்வொன்றையும் இராணுவமே நிர்வகித்து கண்காணித்து பரிபாலனம் செய்து வருகின்றது. இவ் இராணுவ நடைமுறைகளுக்கும் சமாதானம் இயல்பு வாழ்க்கை என்பதற்கும் எவ்வித ஒட்டுமில்லை உறவும் இல்லை. துப்பாக்கி முனைகளின் கீழ் மக்கள் வாய் மூடி மௌனித்தவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். அரசாங்கத்தின் சமாதானமும் ராணுவத்தின் மீட்பும் மென்மேலும் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கவே வழிவகை செய்திருக்கிறது. ஏற்கனவே இடம் பெற்ற போர்களின் முடிவும் நடைமுறையும் இதுதான் என்றால் வன்னிப் போரினால் எதுவும் புதிதாக இடம் பெற்றுவிடப் போவதில்லை. ஒவ்வொரு பகுதியும் மீட்கப்படும்போது அப்பகுதி ராணுவ அடக்குமுறைக்குக் கீழ் சென்றடைகின்றது என்பதே அர்த்தமாகும்.

இத்தகைய பின்புலத்தில் வைத்தே இடம் பெற்று வரும் வன்னிப் போரை நோக்குதல் வேண்டும். தொடுக்கப்பட்டுள்ள வன்னிப் போர் தரைப் பாதைக்கானது என்று கூறப்பட்டது. புலிகளை அழித்தொழிப்பதற்கு என்றும் கூறப்படுகிறது. எப்படியாகினும் தொடங்கியுள்ள வன்னிப் போர் மிகக் கடுமையானதாகவே இருக்கப் போகிறது. ஒரு ராணுவ ஆய்வாளர் வன்னிப் போர் இறுதியானதாக அமையப் போகிறது எனச் சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால் உண்மை அவ்வாறில்லை வன்னிப் போர் மிகக் கடுமையான போர்க்கட்டத்தின் ஆரம்பம் என்றே கூறலாம். ஏனெனில் இதுவரை இடம் பெற்ற புலிகளுக்கு எதிரான போர்களில் புலிகள் குறிப்பிட்டளவு எதிர்ப்பைக் காட்டுவதும் பின்பு பின்வாங்கித் தம்மைத் தற்காத்துக் கொள்வதிலுமே ஈடுபட்டு வந்தனர். அத்துடன் ராணுவத்தை நிலைகொள்ள வைத்த பின் கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களை மேற் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வந்தனர். ஆனால் வன்னிப் போரில் கடந்த கால நடைமுறைகளுக்கு மாறாக முடிந்தளவுக்குப் பின் வாங்காது எதிர்த்து தாக்குதல் நடத்துவதிலேயே புலிகளின் கவனம் இருக்கப் போகிறது. அதற்குக் காரணங்களும் உண்டு. ஒன்று புலிகளின் இறுதித் தரிப்பிடமான முல்லைத்தீவு மாவட்டக் காடுகளை ஊடறுத்துச் செல்ல ராணுவம் முன்னேறுகிறது. இது அவர்களது இதயத்தை ஊடறுப்பது போன்றதாகும். இரண்டாவது வவுனியா யாழ்ப்பாண வீதியை இராணுவம் கைப்பற்றினால் புலிகளின் பலம் வன்னிப் பகுதியில் இரு கூறாக்கப்பட்டு விடும். மூன்றாவது வெலிஓயா - நெடுங்கேணி வழியாக முன்னேறும் இராணுவ நடவடிக்கையால் கிழக்கிற்கான புலிகளின் பாதை தடைப்படலாம். நான்காவது புலிகளிடம் நீண்டதூர ஆட்லறிப் பீரங்கிகள் கைவசம் இருக்கின்றன. ஐந்தாவதாக புலிகள் இயக்கம் யார் விரும்பினாலும் விரும்பாது விடினும் ஓர் சக்தி மிக்க கொரில்லா ராணுவத்தைக் கொண்டிருக்கின்றது. மேற்கூறியவற்றை நோக்குமிடத்து தவிர்க்க முடியாத சூழலில் புலிகள் தமது முழுப் பலத்தையும் வெளிக் கொணர்ந்து வன்னிப் போரில் ராணுவத்தை எதிர்த்து நிற்கவே செய்வர். ராணுவத்தைப் பொறுத்தும் அமெரிக்க ராணுவ உயர் அதிகாரிகளின் பயிற்சி மட்டுமன்றி தற்போதைய காடுகளை ஊடறுத்துச் செல்லும் வியூக அமைப்பிலும் வழிகாட்டப்படுகிறது. முழு ராணுவப் பலமும் தற்போதைய வன்னிப் போரில் பயன்படுத்தப்படுகிறது. தமது ஆட்பலத்தை ஈடு செய்வதற்காக கடற்படையினரையும் தரையுத்தத்தில் பங்கு கொள்ள வைக்கப்பட்டுள்ளது. எனவே இராணுவமும் தனது யுத்த முனைப்பின் முழு வேகத்திலிருந்தும் பின்வாங்க மாட்டாது என்றே கொள்ள முடிகிறது. இவற்றை நோக்கும் போது வன்னிப் போர் மிகக் கடுமையானதாகவும் அமைந்துள்ளது. இதுவரை சில குறிப்பிட்டளவு தூரமே ராணுவத்தினால் முன்னேற முடிந்துள்ளது. ராணுவத்தின் உடனடி இலக்கு புளியங்குளத்தையும், நெடுங்கேணி -புளியங்குளம் நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதுமே ஆகும். இந்த இலக்கை அடைவதற்கு பல நாட்கள் ஆகும் என்ற நிலையே போர் முனையில் காணப்படுகிறது.



அப்படியானால் புளியங்குளத்திலிருந்து கிளிநொச்சி வரையான முப்பது மைல்கள் நீண்டதும் அடர்ந்த காடுகள் கொண்டதுமான வவுனியா - யாழ்ப்பாணம் வீதியை இராணுவம் முழுக்கட்டுப்பாட்டின் கீழும் கொண்டு வருவதற்கு பல மாதங்கள் ஆகலாம். ஏனெனில் குடாநாட்டின் ரிவிரச முதலாவது ராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொள்ள சுமார் மூன்று மாதங்கள் சென்றன. சுமார் பன்னிரண்டு மைல்களைக் கடக்கவே இம் மூன்று மாதங்கள் சென்றன. வெளிப்பகுதிகளும் வீடுகளும் விவசாய நிலங்களைக் கொண்டதுமான வலிகாமம் கிழக்கில் இருந்தே அவ் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறெனில் காட்டுப் பகுதிகளைக் கொண்ட முப்பது மைல்களை எத்தனை மாதங்களில் ராணுவம் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் போகிறது என்பது முக்கியமானதாகும்.

அவ்வாறு வன்னிப் போரின் மூலம் வவுனியா - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை கைப்பற்றப்பட்டாலும் வன்னிப்போர் எச் சந்தர்ப்பத்திலும் முடிவுக்கு வரப்போவதில்லை. அப்படியானால் போரின் மூலம் சமாதானம் என்பது எந்தளவிற்குச் சாத்தியமாகப் போகிறது. அதிலும் குறிப்பாக வன்னிப் போர் எந்தவகையில் சமாதானத்தை கொண்டு வரப் போகிறது என்பதே கேள்வியாகும். அரைகுறை நிலையில் காணப்படும். அதிகாரப் பரவலாக்கல் யோசனையை அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடிக்கடி கொதிப்பித்துக் கொண்டிருக்கிறார். இடையிடை தமிழ்க் கட்சிகளை அழைத்து பசியால் அழும் குழந்தையின் கவனத்தைத் திருப்ப கிலுக்கிகளையும் பீப்பீப் குழல்களையும் கிலுக்கியும் ஊதியும் காட்டுவது போல் காட்டிக் கொண்டிருக்கிறார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது வெளிவிவகாரக் கெட்டித்தனத்தால் இதோ சமாதானம் அதோ சமாதானம் எனக் கூறி உலக நாடுகளின் கவனத்தை திருப்ப முயல்கிறார். ஆனால் யுத்த அமைச்சரான பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்தை தனது தளபதிகள் சகிதம் முழு மூச்சுடன் போரை வன்னி நோக்கி வழி நடாத்திக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் நாட்டில் சமாதானம் என்பதோ அதற்கான நியாயமான அரசியல் தீர்வோ அல்லது உரியவாறான பேச்சுவார்த்தை என்பதோ கானல் நீராகவே காட்சி தருகின்றது என்றே கூறுதல் வேண்டும். எனவே போரின் மூலம் சமாதானம் சாத்தியமற்றதாகும். நியாயமான தீர்வு யோசனைகளும் அதற்கான பேச்சுவார்த்தைகள் மூலமாகவே உண்மையான சமாதானம் தோன்ற முடியும்.

**நமது அரசியல் நிருபர்**



# மீன்பிடித் தொழிலாளர்கள் பாதிப்பு

வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு கடற்கரையோரங்களிலும் கடல் நீரேரிகளிலும் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு வழி செய்யும் வகையில் மீன்பிடித் தொழில் சட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்பு ஆழ்கடலில் மட்டுமே வெளிநாட்டுக் கம்பெனிகள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டன. தற்போது கரையோரங்களிலும் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பிறகு சாதாரண உள்நாட்டு மீனவர்கள் அக்கம்பெனிகளுடன் போட்டி போட்டு கரையோர மீன்பிடித் தொழிலை செய்ய முடியாமல் பாதிக்கப்படுவர். அக்கம்பெனிகள் நவீன மீன்பிடி முறைகளைப் பாவித்து பெருந்தொகையில் மீன்களை பிடிப்பர்.



அத்துடன் கரையோரத்தில் பிடித்த மீன்களை உள்நாட்டில் விற்பதிலும் ஏகபோகத்தை நிலைநாட்டுவார்கள். உள்நாட்டு மீனவர்கள் மீனை விற்கும் விலையை விட குறைந்த விலைக்கே விற்று உள்நாட்டு மீனவர்களின் தொழிலை தோல்வியடையச் செய்வார்கள்.

அதனால் பாதிக்கப்படும் உள்நாட்டு மீனவர்கள் வெளிநாட்டுக் கம்பெனிகளில் கூலிக்கு வேலை செய்யும் மீனவர்களாக மாறுவார்கள். இவ்வாறு உள்நாட்டு மீன்பிடி பாதிக்கப்பட்ட பிறகு அக்கம்பெனிகள் சொல்லும் விலைக்கே எம்நாட்டு மக்கள் மீனை வாங்க வேண்டி வரும். முடியாவிட்டால் மீன் சாப்பிடுவதை நிறுத்த வேண்டிவரும்.

வெளிநாட்டு சந்தைக்காக மீனைப் பிடிக்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு உள்நாட்டில் குறைந்த விலைக்கு மீனை விற்க வேண்டிய அவசியமில்லை. அவற்றின் மீது எந்தவிதக் கட்டுப்பாடும் இருக்காது.

ஆழ்கடலில் பிடிக்கும் மீனை உள்நாட்டு சந்தையில் விற்கக் கூடாது என்ற தடையையும் மீறி வெளிநாட்டுக் கம்பெனிகள் மோசடியாக குறைந்த விலைக்கு உள்நாட்டு சந்தையில் விற்று வருகின்றனர். இதனால் உள்நாட்டு சந்தையிலும் எம்நாட்டு மீனவர்கள் பிடித்த மீன்களுக்கு நல்ல விலைகள் கிடைப்பதில்லை.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர் மீன்பிடித்தொழில் அமைச்சராக இருக்கும் போது தான் இவ்வாறான பாதிப்பு ஏற்படுகிறது என்பதே இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

# மரக்கறிச் செய்கை பாதிப்பு

இராகலைப் பகுதியில் மரக்கறி செய்கை பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இக்காலப் பகுதியில் மழை வீழ்ச்சி இருப்பதில்லை. ஆனால் தற்போது வழமைக்கு மாறாக கூடுதலான மழை இங்கு பெய்கின்றது. இதனால் உற்பத்தி பாதிக்கின்ற அதே வேளையில் போதுமான விலையும் கிடைக்க வில்லை.

இப்பிரதேசங்களில் மிளகாய் மற்றும் கிழங்கு பயிர்ச் செய்கை இம்மாதங்கள் சிறப்பாக செய்யப்படும். தொழிலாளர்கள் வீட்டுக்கு பக்கத்தில் இருக்கும் சிறிய தோட்டங்களில் இப்படியான பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். காலநிலை ஒருபுறம் இருக்க இப்பகுதி அரச விவசாய திணைக்களங்கள் முறையான வழிகாட்டல்களை செய்வதில்லை. சில பணக்காரர்களையும், அவர்களின் சொந்தக்காரர்களையும் முன்னேற்றும் விதமாகவே சில விவசாய அதிகாரிகள் நடந்து கொள்கின்றார்கள். அது மாத்திரமின்றி உரவகைகள், மருந்து போன்றன விலையுயர்ந்துள்ளன. இதனால் சிறு விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். மேலும் விலையை கொடுத்து வாங்கும் தரகர்களின் மோசடி நடவடிக்கைகளும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். ஏன்தான் தோட்டம் செய்கின்றோம் என பலர் அழுது கொள்கின்றார்கள்.

# மிளகாய்ச் செய்கையாளர்கள் சிறையில்

எப்பாவளையில் மிளகாய் உற்பத்தி செய்யும் விவசாயிகளில் சிலர் சூழலை மாசுப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டிலும், பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பாதைக்கு தீங்கு இழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உற்பத்தி செய்த மிளகாய்க்கு சரியான விலையை கொடுத்து அரசாங்கமோ, கூட்டுறவு சங்கமோ வாங்கவில்லை. அதனால் மிளகாய் செய்தவர்களுக்கு பெரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. சரியான விலையை கொடுத்து அரசாங்கம் கொள்வனவு செய்யவில்லை என்பதற்கு எதிர்ப்பை தெரிவிக்குமுகமாக விவசாயிகள் அறுவடையை குவித்து தீயிட்டு எரித்துள்ளனர்.

இவ்வாறு மிளகாய் வீதியில் குவித்து எரிக்கப்பட்டதால் கிளம்பிய புகையால் சூழல் மாசடைந்து விட்டதாகவும், வீதிக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவும் மிளகாய் எரிப்பில் ஈடுபட்ட விவசாயிகளில் சிலரை பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஊர்வலம் சென்ற மூவாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் மீது கண்ணீர் புகைப்பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் உற்பத்தி செலவை விட குறைந்த விலைக்கே மிளகாயை விற்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மிளகாய் செய்வதற்காக வங்கிகளில் வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கக் கூடிய அளவுக்கு கூட மிளகாய்க்கு விலை கிடைக்கவில்லை.

கடனை திருப்பிக் கொடுக்க முடியாத விவசாயிகளில் சிலர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சி ஆட்சியின் கீழ் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லை. தமது ஆட்சியில் நல்ல விலையை கொடுப்பேன் என்று ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டதும். ஐ.தே.கட்சி காலத்தில் கடன் சுமையால் விவசாயிகள் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டது பற்றி கவலையை தெரிவித்ததும் மறக்கப்படக் கூடியவை அல்ல.

உற்பத்திப் பொருட்களை நட்டத்திற்கு விற்க வேண்டியிருந்தால் எவ்வாறு விவசாயிகள் உணவு உற்பத்தியில் நாட்டம் கொள்வார்கள். எப்படி உணவு உற்பத்தியில் தன்னிறைவை காணமுடியும்.

கடன் சுமையிலிருந்து விடுபட முடியாத விவசாயிகளின் எதிர்காலம் எப்படி இருக்கும்? தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்காதா?

# ஈ.பி.எப் கொள்ளை

மத்துரட்ட தோட்டக் கம்பெனி நடத்தும் தோட்டங்களில் தொழிலாளருக்கு ஊழியர் சேமலாப நிதி கொடுக்கப்படவில்லையென தெரிய வருகின்றது. பல தோட்டத் தொழிலாளர்கள் தங்களது சங்கத் தலைவர்களுடன் தோட்டத்துரை பங்களாவுக்கு சென்றபோது அங்குள்ள உத்தியோகத்தவர்கள் கையை விரித்துள்ளார்கள். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு பணம் ஊழியர் சேமலாபநிதிக்குச் செல்லும், அது பின்னர் தோட்டத் தொழிலாளர்க்கு ஓய்வு பெறும் போது வழங்கப்படுவது தெரிந்ததே. ஆனால் அவ்வாறு வழங்க முடியாத நிலையில் தோட்டத்து முகாமையாளர்கள் உள்ளனர். காரணம் தோட்ட ஊழியர் சேமலாப நிதிக்கு பணம் வங்கிக் கணக்கிற்கு போய்ச் சேரவில்லை. அதனால் வழங்கப்பட முடியாது என்று கூறியுள்ளனர். கோடிக்கணக்கான ரூபாய்ப் பணம் கம்பனிகளிடமிருந்து ஊழியர் சேமலாப நிதிக்கு போய்ச் சேரவில்லை என்று கூறப்படுகின்றது. இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் கம்பனிகளால் ஏற்படும் பிரச்சினைகளை கண்டு மனம் கொதித்த நிலையிலுள்ளனர்.

இது இப்படி இருக்க ஹைபாரஸ்ட் பகுதியில் தோட்டமொன்றில் இறந்த தொழிலாளியின் ஊழியர் சேமலாபநிதியை வேறு ஒருவர் எடுத்துள்ளதாக தெரிய வருகின்றது. தோட்ட அலுவலகத்திலுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரே இவ்வாறு செய்ததாக கூறப்படுகின்றது. தோட்டத் தொழிலாளியின் குடும்பத்தினர் என்ன செய்தார்கள் என்பதும் இதுவரை தெரியவில்லை.

# தலைகீழாகி வரும் சட்டம் ஒழுங்கு

முன்னைய ஆட்சிக் காலத்தில் சீர்குலைந்து சிதறிக் கிடந்த சட்டம் ஒழுங்கு என்பவற்றை மீண்டும் நிலை நிறுத்தி வைத்தது ஐக்கிய முன்னணி அரசாங்கம் தான் என சில காலத்திற்கு முன்பு வரை ஆட்சியின் தலைவர்கள் பெருமிதத்துடன் பேசி வந்தனர். அதற்காக ஓரிரு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதையும் பெரிதாகப் பிரச்சாரம் செய்தனர். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல இன்றைய ஆட்சியின் கீழும் நிலைமை பழையபடி தான் மாறி உள்ளது. இன்று சட்டம் எல்லோருக்கும் சமம் என்று கூறப்பட்டாலும் ஒழுங்கு பேணப்படுவதாகக் காட்டப்பட்டாலும் இடம் பெற்று வரும் சம்பவங்கள் சட்டம் ஒழுங்கு தலைகீழாகி வருவதையே எடுத்துக் காட்டுகின்றன.

அண்மையில் ஜனாதிபதி பகிரங்க கூட்டம் ஒன்றில் சர்வாதிகார தென் கொரிய ஆட்சியைப் புகழ்ந்து பேசினார். இதுபற்றி சமசமாஜக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா தனது எதிர் விமர்சனத்தை வெளியிட்டு ஜனாதிபதியின் உரைக்கு கண்டனம் தெரிவித்திருந்தார். ஆனால் அதற்குப் பின் வாசுவிற்கு தொலைபேசிப் பயமுறுத்தல்களும் தகாத வார்த்தைத் திட்டல்களுமே கிடைத்தன. இதுபற்றி அவரே ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ள போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேபோன்று யாழ் மாவட்ட சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எல்.எம்.இல்லியாஸ் தமக்கு விடுக்கப்பட்ட தொலைபேசிக் கொலைப் பயமுறுத்தல் பற்றி பாராளுமன்ற சபாநாயகருக்கு முறைப்பாடு செய்துள்ளார். அம் முறைப்பாட்டில் தனக்கு கொலைப் பயமுறுத்தல் செய்தவர் புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சர் இரத்தினநாயக்க எனவும் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களே சட்டம் ஒழுங்குக்கு மேலால் தமக்கு ஆபத்து என முறையிடப்படும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து வருகின்றது என்றால் இது எங்கே சென்று முடிவடையப் போகிறது என்பதே இன்றைய கேள்வியாகும்.

இதே சூழலில் தான் அண்மையில் கொழும்பில் கஸினோ கிளப் ஒன்றில் பப்புவாநியுகினி நாட்டைச் சேர்ந்த றகர் விளையாட்டு வீரர் ஜோயெல்பெரா சுட்டுக் கொல்லப்பட்டார். இக் கொலைச் சம்பவத்தில் பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தையின் மகன் லோகான் ரத்வத்தை சம்பந்தப்பட்டுள்ளார் என்று சில சாட்சியங்கள் கூறியுள்ளபோதிலும் இதுவரை சட்டத்தின் காவலர்களான பொலீசார் அவர் மீது எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இச்சம்பவம் இன்று சர்வதேச அளவில் பேசப்படும் ஒன்றாகி உள்ளது. பத்திரிகைகள் கேள்வி எழுப்பி நிற்கின்றன. பாராளுமன்றத்தில் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன. ஆனால் அமைச்சர் பாராளுமன்றத்தில் இதுபற்றிப் பேசும் போது விசாரணைகளை நீதிமன்றம் நடாத்தும் பத்திரிகைகள் விசாரிக்கத் தேவையில்லை எனக் கூறி உள்ளார். சட்டம் ஒழுங்கும் அதன் பாதுகாவலர்களான பொலீசும் உரியபடி நடவடிக்கைகளைத் தயக்கமும் தாமதமும் இன்றி இவ் விடயத்தில் எடுத்திருந்தால் பத்திரிகைகள் கேள்வி எழுப்பும் நிலை ஏற்பட்டிருக்காது. சட்டத்தின் முன் சகலரும் சமம் எனக் கூறிக்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியவர்களாகவே பாரபட்சமாக ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டால் சட்டம் ஒழுங்கு என்பது நேராக இருக்கமாட்டாது. அது தலைகீழாகவே செயல்படும்.

இன்று நாட்டின் வடக்கு கிழக்கில் யுத்தத்தின் பேரில் சட்டம் ஒழுங்குகளுக்கு அப்பால் அடிப்படை மனித உரிமைகள் அனைத்துமே காலில் போட்டு மிதிக்கப்படுகிறது. அவற்றை நியாயப்படுத்தும் நிலைமைகள் தொடரப்படுகின்றன. ஆனால் வடக்கு கிழக்கிற்கு வெளியே மக்கள் பலவழிகளிலும் சட்டத்தின் காவலர்களினால் துன்புறுத்தப்படுகின்றனர். பழைய ஆட்சியின் பாணியில் கொலைப் பயமுறுத்தல்கள், குண்டர்களின் கெடுபிடிகள், கொலை முயற்சிகள் படிப்படியாக வளர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இவை விரைவில் அரசியல் சக்திகளுக்கு எதிரான பரந்த அடக்குமுறையாக வளர்ந்து செல்லக் கூடிய சூழல் நிலவுவதாகவே அரசியல் அவதானிகள் கணிக்கின்றனர்.

# 'இவர்' யார் ?

இவர்தான் ஜெனரல் பஞ்சோ விலா. மெக்சிக்கோ நாட்டை ஆண்ட ஜனாதிபதி போபிரியோ டயஸின் அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சி இயக்கப்படையில் முக்கியமானவராக இருந்தார்.

1878 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் திகதி விவசாய குடும்பமொன்றில் பிறந்த இவரின் இயற்பெயர் டொரடியோ அறன்கோ. இவர் பல பெயர்களில் தோன்றியபோதும் பிரான்சிஸ்கோ பஞ்சோ விலா என்ற பெயரிலேயே பிரபல்யமாகவிருந்தார்.



இளமைக்காலத்தில் பணம் படைத்தவர்களின் சொத்துக்களை கொள்ளை அடித்து ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் கொள்ளைக்காரனாகவே இருந்தார்.

மக்களை அடக்கியொடுக்கி வந்த அமெரிக்க கைப்பொம்மையாக இயங்கிய ஜனாதிபதி போபிரியோ டயஸ் அரசாங்கம் 'பஞ்சோவிலாவை' கைது செய்ய வலைவிரித்திருந்தது.

இக்காலத்தில் தலைமறைவாகியிருந்த 'பஞ்சோ விலா' போபிரியோ டயஸ் அரசாங்கத்திற்கு எதிராக போராடிய பிரான்சிஸ்கோ மதிறோவின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார். அவ்விடுதலைப் படையின் கோர்னலாக நியமிக்கப்பட்ட அவர் 1911 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தில் விடுதலை படைக்கு தலைமைதாங்கி தாக்குதல்களை மேற்கொண்டார்.

இப்புரட்சியின் பின்னர் பிரான்சிஸ் மதுறோ ஜனாதிபதியானார். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் நடைபெற்ற சதியில் பிரான்சிஸ் கோ மதுறோ கொலை செய்யப்பட்டார். இக்கொலைக்குப் பிறகு பிரான்சிஸ்கோ மதுறோவின் இயக்கத்திற்கு தலைமை தாங்கியதுடன் தென் மெக்சிக்கோவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்.

மெக்சிக்கோவின் உள்நாட்டு விடயங்களில் அமெரிக்கா தலையிடுவதால் அமெரிக்கா மீது மிகவும் வக்கிரம் கொண்டவராக இருந்தார். 1913 ஆம் ஆண்டு நடைபெற்ற சதிக்குப் பிறகு இன்னுமொரு கிளர்ச்சிப் படையின் தாக்குதல்களுக்கு நின்றுபிடிக்க முடியாது அவரது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை விட்டுவிட்டு காட்டிற்குள் ஓடி மறைந்தார்.

காட்டிற்குள் மறைந்திருந்து கொண்டு மெக்சிக்கோ அரசாங்கத்திற்கு தலையிடியை கொடுக்கும் விதத்தில் கொலைகளிலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டு வந்தார். 1916 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆந் திகதி மெக்சிக்கோவில் இருந்த அமெரிக்கர்களில் பெருந்தொகையானோரை இவரது படை படுகொலை செய்தது.

இவ்வாறான நடவடிக்கைகளால் 1920 ஆண்டு இவருடன் மெக்சிக்கோ அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பேச்சுவார்த்தையின் உடன்படிக்கையின் படி இவர் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட இணங்கினார். இவர் மெக்சிக்கோ அரசபடையின் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அமெரிக்காவிற்கு எதிரான ஒரு தேசியவாதியாக விளங்கிய இவருக்கு இராணுவத்திலும், மக்கள் மத்தியிலும் ஆதரவு இருந்தது.


மக்கள் மத்தியில் இவருக்கு இருக்கும் ஆதரவினால் ஜனாதிபதி அல்வோரா ஒப்றேகனுக்கு சவாலாக இருந்தார்.

இஹால் அல்வோரா ஒப்றேகன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்படலாம் என்ற நிலைமை இருந்தது. இப்பயத்தின் காரணமாக இவர் 1923 ஆம் ஆண்டு யூன் 20 ஆம் திகதி ஒப்றேகனின் ஆதரவாளர்களால் கொலை செய்யப்பட்டார்.


அமெரிக்க பிடியிலிருந்து மெக்சிக்கோவை விடுவித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று நேர்மையான நோக்கம் கொண்டிருந்த 'பஞ்சோ விலா' சதிக்குப் பழியானார்.

# அமெரிக்கா ஏன் அழுகிறது?

கொங்கொங் ஒரு சிறு நிலப்பரப்பு. அது ஒரு தீவும் ஆகும். சீனாவின் பிரிக்க முடியாத பகுதியுமாகும். அன்றைய சீன நிலவுடமை ஆட்சியாளர்களிடமிருந்து பிரித்தானியர் அதனை 99 வருடகால குத்தகை ஒப்பந்தத்தில் பெற்றுக் கொண்டனர். இச்சிறிய நிலப்பரப்பு படிப்படியாக உலக முக்கியத்துவம் கொண்ட ஒன்றாக மாற்றம் பெற்றது. நிதி வர்த்தக வியாபார கொடுக்கல் வாங்கல்களின் பிரதான மையமாகியது. ஒரே நேரத்தில் தமது நிதி வர்த்தக வியாபார அலுவல்களைச் செய்யவும் அதேவேளை ஓய்வு உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளவும் கொங்கொங் வசதியான ஓர் இடமாக மாறியது. தீர்வை அற்ற துறைமுக வசதியும் இலகுவில் சகல பொருட்களையும் ஓரளவு குறைந்த விலைகளில் வாங்கக் கூடிய நிலைமைகளும் கொங்கொங்கில் காணப்பட்டன. இவை அனைத்தாலும் கொங்கொங் சர்வதேச முக்கியத்துவம் கொண்டதாகத் திகழ்கின்றது



இத்தகைய கொங்கொங்கை மீளவும் தம்மிடம் ஒப்படைக்கும்படி சீனா பிரித்தானியாவிடம் எண்பதுகளிலேயே கேட்டிருந்தது. அதாவது முன்னைய ஒப்பந்தத்தின் படி 99 வருடங்கள் 1997 ல் முடிவடைவதை மையமாகக் கொண்டு சீன - பிரித்தானிய அரசாங்கங்களுக்கிடையிலான தொடரான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. முடிவில் இவ்வருடம் யூன் 30 ம் திகதியுடன் கொங்கொங்கை சீனாவிடம் மீளவும் கையளிக்க பிரித்தானியா ஒப்புக் கொண்டது. அதன்படி எதிர்வரும் யூலை 1ம் திகதியில் இருந்து கொங்கொங் சீனாவின் பகுதியாகின்றது. ஆனால் கொங்கொங்கின் தற்போதைய அமைப்பு முறையை அடுத்த ஐம்பது



ஆண்டுகளுக்கு தொடர்வதற்கு மேற்படி ஒப்பந்தத்தில் சீனா உத்தரவாதம் வழங்கி இருக்கிறது. அதாவது 'ஒரு நாடு இரண்டு முறைமைகள்' என்னும் கொள்கையைச் சீனா பின்பற்றப் போவதாக அறிவித்துள்ளது. மேற் கூறிய 'ஒரு நாடு இரண்டு முறைமைகள்' என்னும் சீனாவின் நிலைப்பாடு சரியா? பிழையா? அல்லது வெற்றியளிக்குமா அன்றி தோல்வியடையுமா? என்பதல்ல நமக்கு முன்னால் உள்ள பிரச்சினை. அதனைச் சீன மக்களும் கொங்கொங் மக்களுமே தீர்மானித்துக் கொள்வார்கள்.

ஆனால் கொங்கொங் சீனாவிடம் திருப்பி ஒப்படைக்கப்படுவதைப் பொறுக்கமாட்டாது அமெரிக்கா புலம்பி அழுவது தான் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். ஒரு நாடு தனது ஒரு பகுதியை அந்நிய வல்லரசு ஒன்றிடமிருந்து மீளப் பெற்றுக் கொள்வதை மிக நியாயமானது என்றே எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அமெரிக்க ஆளும் வர்க்கமும் அவர்களது தொடர்பு ஊடாக சாதனங்களும் கொங்கொங்கின் எதிர்காலம் அபாயகரமாக அமையப் போகிறது என்றும் ஓலம் வைத்து வருகின்றன. அமெரிக்கா சிரித்தால் அல்லது அழுதால் அன்றி மௌனமாக இருந்தால் அவற்றுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதை உடனடியாகவே ஊகித்து உரிய காரணத்தை உலக மக்கள் இலகுவில் அறிந்து கொள்ளத் தக்கதான ஒரு நடைமுறை அனுபவத்தைப் பெற்றுள்ளனர். அந்தளவிற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நச்சுத்தனங்களும் கொடிய போக்குகளும் உலக மக்கள் அடையாளம் காணக்கூடியவாறு தெளிவாகி உள்ளன.

எனவே தனது உலக ஏக ஆதிக்கத்திற்கு குறுக்கே நிற்கும் சீன நாட்டை எந்த வழியிலாவது உதைத்து உருக்குலைத்து விட அமெரிக்கா முயன்ற வண்ணமே இருக்கிறது. அதன் ஒரு அம்சமாகவே கொங்கொங்கின் எதிர்காலம் பற்றி அமெரிக்கா அழத் தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே தாய்வான், தீபெத், தியன்அன்மென் சதுக்க சம்பவம் போன்றவற்றில் அழாத அழுகையையா தற்போது கொங்கொங் மீளளிப்பிலும் அழப்போகிறது. எவ்வாறாயினும் கொங்கொங் சீனாவிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவது வரவேற்கப்பட வேண்டியதாகும். தாய்வானைப் போல் கொங்கொங்கையும் வைத்து சீனாவிற்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்ற ஏகாதிபத்தியக் கனவு இம்மாத முடிவுடன் முறியடிக்கப்படுகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையில் இது சாதகமானதோர் அம்சமாகும்.

# சுகார்டோவுக்கு ஆபத்து

இந்தோனேசியா ஜனாதிபதியின் சுகார்டோ நடந்து முடிந்த தேர்தலிலும் வெற்றி பெறுவார் என்று எல்லோருக்கும் முன்னே தெரியும். அவரது கட்சியான கோல்கார் கட்சி 70.02 சதவீத வாக்குகளால் அமோக வெற்றியடையும் என்று அக்கட்சி வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பே அறிவித்து விட்டது. 1967 ஆம் ஆண்டு முதல் சுகார்டோ இந்தோனேசியாவை ஆண்டு வருகிறார். அவரும் அவருடைய குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் மிக வசதியுடன் சுகபோகமாக வாழ்கின்றனர்.

தேர்தலில் அவர் வெற்றி பெற்றாலும் இதற்குப் பிறகு அவரின் ஆட்சிக்கு எதிராக மக்களின் எதிர்ப்பை அவர் எவ்வாறு சமாளிக்கப் போகிறார் என்பது கேள்வியே. அவர் கம்யூனிஸ்ட்டுகளை ஒழிப்பதாக ஆறு லட்சத்துக் மேற்பட்டவர்களை கொன்று குவித்த சர்வாதிகாரி. தனக்கு எதிராக யாரும் இருக்கக் கூடாது தனது அரசிற்கு எதிராக யாரும் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் எதிரான கருத்துக்களை முன்வைக்கும், வைக்க முற்படும் சகலரையும் இன்றும் கொன்று குவிக்கவும், சிறையில் அடைக்கவும் தயங்காதவர். ஜனநாயக உரிமைகளை கோரி மக்கள் பேரணிகளும், கூட்டங்களும் என்றுமில்லாதவாறு நடந்து முடிந்த தேர்தலின்போது இடம் பெற்றன. அக்கட்டங்களிலும் பேரணிகளிலும் என்றுமில்லாதவாறு வெளிப்படையாக சுகார்ட்டோ மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. சுகார்டோவிற்கு எதிராக போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இவ்வாறான அரசு எதிர்ப்பு நடவடிக்கைகள் தேர்தலுடன் நின்றுவிடப்போவதில்லை. அவை நிச்சயம் பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வளர்ச்சியடைந்து சுகார்டோ என்ற மக்கள் விரோத, சர்வாதிகாரியை பதவியில் இருந்து தூக்கி எறிய வழிகோலும்.

இந்தோனேசியாவில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதாகவே இந்தோனேசியாவிலுள்ள உலகவங்கியின் பிரதிநிதி கூறுகிறார். இந்நிலையில் 'மக்கள் ஏன் சுகார்டோவை மாற்ற நினைக்கிறார்கள் என்று தனக்கு புரியவில்லை என்று கூறியிருக்கிறார்.

ஆனால் ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் செய்கின்ற மோசடிகள், ஊழல்கள் என்பவற்றுக்கு எதிராக மக்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். சிவில் நிர்வாகம் என்பதே இல்லாமல் அரசகாரியாலயங்கள் தொழிற்சாலைகள் ஏன் தேவாலயங்கள் கூட இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இராணுவத்தின் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளாலும் அடக்குமுறைகளாலும் அத்துமீறல்களாலும் மக்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.


இவற்றுக்கு முடிவு கட்டுவதற்காக இந்தோனேசிய மக்கள் சுகார்டோவை எதிர்க்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் சபையினுள்ளும் வெளியிலும், சட்டபூர்வமாகவும் சட்ட மறுப்பாகவும் இந்தோனேசியாவில் ஜனநாயகத்துக்கான இயக்கங்கள் இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


மிதிபட்டுக் கிடக்கும் வடபுலத்து
யாழ் மண்ணில் இருந்து மீண்டும்
வெளிவந்துள்ளது

**தாயகம்.**

*33 வது இதழ் விலை ரூபா 20/=*

கிடைக்குமிடம்:
சவுத் ஏசியன் புக்ஸ்,
S-44, 3 வது மாடி
கொ.ம.ச கட்டிடத் தொகுதி,
கொழும்பு -11



# வி.ரி.தர்மலிங்கம்:
## ஒரு எதிர்ப்பு அரசியல்வாதி
## ஒரு சமூகசேவாவாதி

மலையக மக்கள் முன்னணியின் உபதலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான வி.டி.தர்மலிங்கம் மக்களின் நலனையே பெரிதாக மதித்தவர். மக்களுக்கு சேவை செய்வதற்காக தன்னைத் தானே வருத்தி உழைத்தவர். தானும் தன்னுடைய குடும்பமும் என்று வாழ்வதே படித்தவர்களின் பொதுவான வாழ்க்கை முறையாகும். இதற்கு மாறாக வாழ்நாள் முழுவதையும் மக்களின் நலனுக்காகவே செலவிட்ட, செலவிடும் படித்தவர்களின் தொகை மிகவும் குறைவாகும். அவர்களில் ஒருவரே தர்மலிங்கம்.

மலையகத்தில் 1960, 70 களில் படித்தவர்களில் பெரும்பான்மையானோர் சமூக நலனில் அக்கறைக் கொண்டவர்களாகவே இருந்தனர். அவர்களில் பலர் இன்னும் இருக்கின்றனர். 1980 களிலும் அதற்குப் பிறகும் படித்தவர்களுக்கு தனிப்பட முன்னேறுவதற்கு வாய்ப்புக்கள் இருந்ததால் அவர்களில் தங்களின் தனிப்பட்ட முன்னேற்றத்தை தனி சமூக முன்னேற்றத்துடனோ, இணைப்பதைக் கடமையாக கொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை.

1980 களுக்கு முன்பு ஏற்பட்ட கல்வி வளர்ச்சியும், விழிப்புணர்வும் அரசியல் வளர்ச்சியும் அதற்கு பிறகு படித்தவர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருந்தன. அந்த அடிப்படையை ஏற்படுத்தியவர்களில் வி.டி.தர்மலிங்கம் மிகவும் குறிப்பிடக் கூடியவராவார். நாளாந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விட அடிப்படை பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு வேண்டும் என்று அவர் வாயளவில் கூறினாலும் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளிலும் சமூக சேவைகளிலும் அவர் மிகுந்த ஈடுபாடுடையவராக மட்டுமே இருந்தார். ஒரு பொதுச்சேவை செய்பவர் என்ற அடையாளம் அவருக்கு இருந்தது.

இவை யாவும் அவரிடம் காணப்பட்ட சமூக சேவாவாதத்தின் வெளிப்பாடாகும். சமூக சேவைகளில் மூலம் ஒரு சமூகம் முன்னேற்றமடைய முடியாது. ஆனால் பிற்பட்ட சமூகத்தில் சமூக சேவைகளுக்கு அதிகம் தேவையிருக்கிறது என்பதால் அவற்றிலே மூழ்கி விட்டால் சமூக் சேவையே மக்களுக்கான அடிப்படைத் தேவையாகி விடுவதை தவிர்க்க முடியாது. சமூகத்தை மாற்றியமைப்பதற்கு மக்களை தயார் செய்ய, அல்லது அணிதிரட்ட் சமூக சேவைகளினூடாக பல பணிகளாற்றப்பட வேண்டும். ஆனால் சமூகசேவைகள்தான் சமூக மாற்றத்திற்கான நடவடிக்கைகளல்ல. சமூக சேவை மனப்பான்மை தலைமைத்துவ பண்புகளில் ஒன்று. சமூக சேவை மனப்பான்மையே முழுத் தலைமைத்துவ பண்பாகி விடாது. இவ்வாறு சமூக சேவையையே முழுமையாக கொள்வதையே சமூக சேவாவாதம் என்கிறோம். இவ்வாதம் அடிப்படை சமூக மாற்றத்திற்கான அரசியலுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிரானதாகவே இருக்கும்.

வி.டி.தர்மலிங்கம் சமூக சேவைகளுக்கும் சீர்திருத்தங்களுக்கும் கொடுத்த முக்கியத்துவத்தினால் அவரை ஒரு சமூகசேவாவாதியாக அடையாளம் காணமுடிகிறது.

அரசியல்ரீதியாக அவர் ஒரு எதிர்ப்பு அரசியல் நடைமுறையை கொண்டிருந்தார். அரசியலில் எதிர்ப்பு அரசியல் என்பது முற்போக்கானதாக இருந்தாலும் அது ஒரு வரையறைக்குட்பட்டதே. எதிர்ப்பு அரசியல் மாற்று அரசியலுக்கு வித்திடும் போதே முழுமையடைகிறது. மாற்று அரசியல் சமூக மாற்றத்திற்கான புதிய அரசியலுக்கு அடிப்படைகளை அமைக்கும் போதுதான் முழுமையடைகிறது. மலையகத்தில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் எதிர்ப்பு அரசியல் அதற்குரிய சமூகக்கடமையை முழுமையாக நிறைவேற்றவில்லை என்பது உண்மைதான். இந்தப் பின்னணியில் மலையக மக்களுக்கு எதிரான சுரண்டல், அடக்கு முறைகள், ஒடுக்குமுறைகளுக்கு துணைபோகும். மலையக அரசியலுக்கு எதிரான எதிர்ப்பு அரசியலை முன்னெடுப்பதிலேயே தர்மலிங்கம் முனைப்பாக செயற்பட்டுள்ளார் என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

இ.தொ.கா.விற்கும் அதன் பழைமைவாத, பிற்போக்குவாத தலைமைக்கும் எதிராக செயற்படவே திராவிடக் கழகத்தை நாடினார். மலையக இளைஞர் முன்னணியை கட்டி வளர்க்க பாடுபட்டார். அந்தப் பாரம்பரியத்துடனேயே மலையக மக்கள் முன்னணியில் இணைந்து செயற்பட்டார்.

உலகப் புரட்சியினை நோக்காகக் கொண்ட சமூக மாற்றத்தை அடிப்படையான கொள்கையாகக் கொண்ட லங்கா சமசமாஜக் கட்சியின் நீண்ட நாட்கள் அவரால் உறுப்பினராக இருக்கமுடியவில்லை. இதற்கு அவரது 'எதிர்ப்பு அரசியல்' என்ற நிலைப்பாடு காரணமாக இருந்திருக்கலாம்.

எந்தவொரு நடவடிக்கையிலும் விரைவாக முடிவை அல்லது விளைவை கண்டுவிட வேண்டும் என்று பொறுமையற்ற இயல்பை அவரிடம் காணமுடிந்தது. அவர் இறப்பதற்கு முன்பு மலையகம் அரசியல் விழிப்புணர்வை பெற்றுவிடும் என்று அவர் அடிக்கடி கூறுவார். இது விளைவுகளை தான் உயிருடனிருக்கும் போதே கண்டுவிட வேண்டும் என்ற அவரின் அக விருப்பத்தின் வெளிப்பாடே ஆகும்.

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலிருந்து பொருளாதார அபிவிருத்தி அரசியல் வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி போன்ற எல்லாவற்றிலுமே ஒரு அவசரமான அணுகுமுறையையே தர்மலிங்கம் கொண்டிருந்தார். மலையக மக்களின் அக்கறைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் எதிரான பழைமைவாத, பிற்போக்குவாத அரசியலுக்கும் 'எதிரான ஒரு அரசியல்' என்பதனை முதன்மைப் படுத்துபவராகவே அவர் இருந்தார்.

1960 களிலும் 1970 களிலும் சண்முகதாசனின் தலைமையில் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு அரசியல் இயக்கத்தில் ஒருவராக தர்மலிங்கத்தை அடையாளம் காணமுடியாவிட்டாலும், அவர் எதிர்ப்பு அரசியல் என்ற வரையறைக்குட்பட்டவராகவே இருந்தார்.

மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படுவது முற்போக்கானதே. ஆனால் அந்த எதிர் நடவடிக்கைகள் முழுமையானவை அல்ல. அவற்றை மாற்று நடவடிக்கைகள் பின்தொடர வேண்டும். அதன் பின் புதிய நிலைமையை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளை இலக்காக கொண்டு செயற்பட வேண்டும். இதுவே சமூக மாற்றத்திற்காக ஆகக்குறைந்த சுருக்கமான வழி ஆகும்.

தர்மலிங்கத்தின் எதிர்ப்பு அரசியல் மாற்று அரசியலாக வளர்த்தெடுக்கப்படாததால் அவரின் அரசியல் ஒரு எல்லைக்கு அப்பால் நகர முடியாததாகியுள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. அதுமட்டுமன்றி நகரமுடியாததால் பழைமைவாத பிற்போக்கு தலைமைகளுக்கு துணைபோய்விடக் கூடிய அபாயங்களும் தோன்றச் செய்தன.

எனவே காலவதியாகிவிட்ட எதிர்ப்பு அரசியலில் மலையகத்தில் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும். எதிர்ப்பு அரசியலில் முன்னெடுக்கப்படாது தவறவிடப்பட்ட நடவடிக்கைகளையும் விமரிசன ரீதியாக தொகுத்து மாற்று அரசியல் முன்னெடுக்க வேண்டியதே மலையக சமூகத்தின் முன்னுள்ள பொறுப்பாகும். அந்த மாற்று அரசியல் வெறும் மாற்று அரசியலாக மட்டும் இருந்து விடாமல் சமூக மாற்றத்திற்கான அடிப்படையை கொண்டதாக அமைய வேண்டும்.

அதேபோன்று சேவையையே முதன்மையாக கொண்ட சமூக சேவாவாதத்தாலும் சமூக மாற்றத்திற்கான அரசியலை முன்னெடுக்க முடியாது.

எனவே தர்மலிங்கத்திடம் காணப்பட்ட 'எதிர்ப்பு அரசிய'லையும் 'சமூக சேவா வாதத்தையும் விமரிசனரீதியாக தொகுக்க வேண்டும். அந்த அனுபவங்களிலிருந்து எதிர்காலத்தை நோக்க வேண்டும். இதுவே தர்மலிங்கத்திற்கு செலுத்தும் நேர்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

டி.கிருஸ்ணசாமி

# கிழக்கின் கடதாசி ஆலை மூடப்படுமா அல்லது தனியாருக்கு கொடுக்கப்படுமா?

கிழக்கு மாகாணத்தில் 45 வருடங்களாக இயங்கி வருவது வாழைச்சேனை காகித உற்பத்தி ஆலை. இவ் ஆலையில் இருந்து தரமான கடதாசிகள் உற்பத்தியாகி வந்தன. நாட்டின் குறிப்பிட்டளவு தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் அமைந்திருந்தது. ஆனால் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமாகிய பின்னர் இக்கடதாசி ஆலை படிப்படியாக ஏனோதானோ என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின் கடதாசி ஆலையின் போக்கில் ஏதாவது புதிய மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் இந்த அரசாங்கம் மனித முகத்துடனான திறந்த பொருளாதாரம் எனக் கூறியதில் ஏதாவது இருக்கும் என நம்பியவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது. இந்த அரசாங்கம் வந்த பின் கடதாசி ஆலைகளின் உற்பத்தித் திறன் அதனால் நாட்டின் தேவையை எந்தளவு பூர்த்தி செய்ய முடியும். அதன் தரம் போன்றவற்றை உரிய மதிப்பீடு செய்து கொண்ட பின்பே இறக்குமதிக்கான அளவையும் அதன் மீதான வரிச் சலுகையையும் வழங்கி இருக்க வேண்டும். அவை எதையும் கவனத்தில் கொள்ளாது 35% மாக இருந்த இறக்குமதி வரியை 10% மாகக் குறைந்ததன் மூலம் கடதாசி ஆலையின் உற்பத்தி தேங்க ஆரம்பித்தது. இன்று 3500 மெற்றிக் தொன் கடதாசி வகைகள் கடதாசி ஆலையில் முடங்கிக் கிடக்கின்றன. கழிவு கடதாசியாக நிலுவை விலைக்கும் கூட விற்க முடியாத நிலையே உருவாகி உள்ளதாக ஒரு ஆலைத் தொழிலாளி மிகுந்த வேதனையுடன் கூறினார்.

மொத்தம் 1322 தொழிலாளர்கள் ஊழியர்கள் வேலை செய்து வரும் வாழைச் சேனை கடதாசி ஆலையின் இக்கதி அதன் எதிர்காலத்தை பலத்த கேள்விக்கு உள்ளாக்கி உள்ளது. வடக்கின் ஏற்கனவே இருந்து வந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மூடப்பட்டு விட்டது. ஆனையிறவின் உப்பளம், காங்கேசன்துறை சீமெந்து ஆலை போன்ற பாரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. வடக்கு கிழக்கில் எஞ்சியிருப்பது வாழைச்சேனை கடதாசி ஆலை மட்டுமே. அதற்கும் மூடுவிழா நடத்துவதற்கான முன் முயற்சியாகத்தான் கடதாசி இறக்குமதித் தீர்வையின் மூலம் முடக்கப்படுகிறதா என்ற சந்தேகம் தொழிலாளர்கள் -ஊழியர்கள் மத்தியில் மட்டுமன்றி கிழக்கு மாகாண மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. நாட்டின் தேவைக்கு ஏற்ப இறக்குமதி செய்வதும் அதற்கு நியாய விலை வகுப்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். அதேவேளை உள்ளூரின் தரமான உற்பத்தியைச் சாகடித்து அத்துறையில் வேலை செய்வோரின் தொழிலுக்கு உலைவைத்துத்தான் இறக்குமதி செய்ய வேண்டும் என்பதற்கில்லை. எனவே அரசாங்கம் உடன் இவ்விடயத்தில் கவனத்தை திருப்பி மேற்படி கடதாசி ஆலையின் தொடர் இயக்கத்திற்கும் அதன் இருப்புக்கும் உத்தரவாதம் அளிக்கும் முடிவுகளுக்கு வர வேண்டும். அப்படி நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கமும் சம்மந்தப்பட்ட அமைச்சும் போதிய அக்கறையும் அவசரமும் காட்டவில்லை என்றால் அதன் அர்த்தம் ஒன்றில் ஆலையை மூடப் போகிறது அல்லது நஷ்டம் எனக்காட்டி தனியாருக்கு தாரை வார்க்கப் போகிறது என்பது தான். அப்படியான ஒரு சூழல் தோன்றுமானால் அதற்குகெதிராகத் தொழிலாளர்கள் ஊழியர்கள் மட்டுமன்றி உயர் அதிகாரிகளும் ஓரணியில் திரண்டு மக்கள் ஆதரவுடன் செயல்படத் தயாராக வேண்டும்.

வாழைச்சேனை கடதாசி ஆலை விவகாரத்தில் இரண்டு அம்சங்கள் காணப்படுகின்றன. ஒன்று அவ் ஆலை தமிழர், பிரதேசத்தில் இருப்பதாலும் கூடியளவு தொழிலாளர்கள், ஊழியர்கள் தமிழ் முஸ்லீம்களாக இருப்பதுமாகும். இரண்டாவது கடந்த அரசாங்கம் போன்று இன்றைய அரசாங்கமும் தனியார்மயத்தை தொடர்ந்து முன்னெடுத்து தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாகச் செயல்பட்டு வருவதாகும். இவ்விரண்டு நிலைப்பாடும் எதிர்க்கப்பட வேண்டியதாகும். இன ரீதியாகவும் வர்க்க ரீதியாகவும் ஒடுக்குமுறைக்குள்ளாகும் அனைத்துப் பிரிவினரும் தமது உரிமைகளுக்காக முன் வந்து போராட வேண்டியது அவசியமாகின்றது.



**புதியபூமி**
**சந்தா விபரம்**

ஒரு வருடம் ரூபா 150/=
ஆறு மாதம் ரூபா 75/=
தனிப் பிரதி 10/=

வெளிநாடுகளில்
ஒரு வருடம் 25 அமெ.டோலர்
(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி
இ.தம்பையா,
S-47, 3வது மாடி,
கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட்
கொழும்பு - 11, இலங்கை

# சுதந்திர வர்த்தக வலயங்களின் சோகக் கதைகள்



சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைக்கு செல்வதன் மூலம் தமது குடும்பங்களின் பொருளாதார அவல நிலையை நீக்கலாம் என்ற நம்பிக்கையில் அங்கு தொழில் வாய்ப்பை பெற்ற ஆயிரமாயிரம் கிராமத்து யுவதிகள் அனுபவித்து வரும் வேலை நிலைமைகள் பற்றி அங்குமிங்குமாக தகவல்கள் வந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

1996 யூன் மாதத்தில் 19 வயதுடைய தீபாவின் கண்ணுக்குள் தையல் மெசின் ஊசித்துகள் மூன்று சிதறியதால் கண்களைத் திறக்க முடியாமல் உதவி கோரிக் கத்தினாள். உடனடியாக உதவி கிடைக்கவில்லை. இரத்தம் வழியும் கண்களுடன் கொதிக்கும் வெய்யிலில் வலயத்தில் உள்ள மருத்துவ நிலையத்திற்கு தான் அனுப்பப்பட்டதாக கண்ணீர் வழியக் கூறினாள் தீபா என்ற யுவதி.

மருத்துவ நிலையத்தை அடைந்த சமயம் தீபா நினைவிழந்த நிலையில் இருந்தார். அங்கு இருந்த தாதியினால் கண்ணில் இருந்த ஒரு துகளை மட்டுமே எடுக்க கூடியதாயிருந்தது. தாமதிக்காது கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கு போகும்படி அந்த தாதி ஆலோசனை கூறியிருந்தார்.

ஆனால் தொழிற்சாலை மேற்பார்வையாளரோ உடனடியாக ஆஸ்பத்திரிக்கு தீபாவை அனுப்பாது உற்பத்தியை பாதிக்காமல் வேலையைச் செய்யுமாறு பணித்தார். ''நான் வேலை செய்ய முயன்றேன், எனது கண்களிலிருந்து கண்ணீர் வந்தபடியிருந்தாலும் வேதனையினாலும் என்னால் முடியவில்லை'' துகள்கள் கண்களுக்குள்ளேயே இருந்த நிலையில் வேதனையுடன்கூடிய அன்றைய இரவை தனது விடுதியில் கழித்தாள் தீபா.

தன்னை கண் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு ஒழுங்கு செய்யுமாறு தொழிற்சாலை நிர்வாகத்தை வேண்டிக் கொண்டார். வேண்டுகோள் முதலில் நிராகரிக்கப்பட்ட போதும் பின்னர் தயக்கத்துடன் தொழிற்சாலை வாகனத்தில் அனுப்பி வைக்கப்பட்டார்.

''நான் கொழும்புக்கு முன்பு ஒரு தடவையாவது சென்றதில்லைல. ஆஸ்பத்திரி எங்கிருக்கின்றது என்பதே எனக்குத் தெரியாது'' என்னுடன் உதவிக்கு ஒருவரும் அனுப்பி வைக்கப்படவில்லை. பின்னர் தீபாவின் நண்பி ஒருத்தி தனது ஒருநாள் ஊதியத்தை தியாகம் செய்து தீபாவுடன் சென்றார்.

சத்திரசிகிச்சையின் பின் இரண்டு மாதங்கள் ஒய்வெடுக்குமாறு டாக்டர் ஆலோசனை கூறியிருந்தார். இரண்டாவது தடவையாக ஆஸ்பத்திரி சென்ற போது தீபா தனது வாழ்நாள் பூராவும் மூக்கு கண்ணாடி அணிய வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

வேலைக்கு மீண்டும் வந்த போது அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மூக்கு கண்ணாடி வாங்குவதற்கென்றாலும் பணம் தருமாறு கேட்டதற்கும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டு வாரங்களின் பின் அந்த தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நேரத்தில் ஏற்படும் விபத்துக்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்த உறுதி மொழியை நிராகரிக்கும் விதத்தில் தீபா தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை விளக்கி கூறியிருந்தார்.

பின்னர் தொழிற்சாலை அதிகாரி ஆயிரம் ரூபாவை தீபாவிடம் கொடுத்து 'உனக்கு இதை எனது சொந்தப் பணத்திலிருந்தே தருகிறேன். நீ இதற்கு உரித்துடையவள் என்று நினைக்காதே' என்றார்.

தனது கண்ணாடியை வாங்குவதற்காக தேவைப்பட்ட மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தனது சிறு சேமிப்பான சங்கிலியை அடகு வைத்தார். இன்று தீபா என்ற அந்த இளம் யுவதிக்கு வேலையும் இல்லை. அத்துடன் கண்ணும் பார்வை குறைந்தநிலை.

நாளாந்தம் நான்கு அல்லது ஐந்து வலையத்துத் தொழிலாளிகள் சிகிச்சைக்காக ஜா-எலை மாவட்ட ஆஸ்பத்திரிக்கு வருவதாகத் தெரிவிக்கும் டாக்டர்.பீ.டபிள்யூ.பீ.டீ. சில்வா ''பெரும்பாலானவர்கள் விரல்கள் துண்டிக்கப்பட்டோ அல்லது நசுக்கப்பட்டோ சிலசமயங்களில் தெறிகள் விரலுடன் தைக்கப்பட்ட நிலையில் வருவதுண்டு'' 'மின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பலரை நாம் சிகிச்சை செய்கின்றோம்'' என்றார்.

பியகம கிராம மருத்துவமனை குறைந்தது வருடந்தோறும் ஐம்பது ஊழியர்களை பாரதூரமான காயங்களுக்கு சிகிச்சை செய்கிறது என அம் மருத்துவமனையினர் கூறுகின்றனர்.

பத்திரான என்ற யுவதி தொடர்ந்து மூன்று வருடங்களில் மூன்று விரல்களை இழந்துள்ளாள். ஏ ஜே எஸ் அப்பரல்ஸ் நிறுவனத்தின் தெறிகள் பொருத்தும் பகுதியில் அப்பெண் வேலை செய்து வந்தார். விரல்களை இழந்ததன் காரணமாக அவருக்கு வேலையும் பறிபோனது. ஏனையோரின் வேகத்தில் இவரால் ஒரு வேலையை செய்து முடிக்க இயலாது என்ற காரணத்தால் நிர்வாகம் இவரை தொடர்ந்தும் வேலையில் வைத்திருக்க முடியாது எனத் தெரிவித்து விட்டது.

ஸ்மாட் சேட் (லங்கா) லிமிட்டற் நிறுவனத்தில் வேலை செய்த மெனிக்கே ரணதுங்காவின் ஒரு கண்ணுக்குள் உடைந்து தெறித்த ஊசியினால் ஒரு கண் பார்வையை அவர் இழந்துள்ளார். 14 நாள் மருத்துவ விடுமுறையின் போது சுகம் ஏற்படாததால் அவரால் வேலைக்கு சமூகமளிக்க முடியவில்லை. இதன் காரணமாக நட்டஈடு எதுவுமின்றி மெனிக்கே வேலையிலிருந்து நீக்கப்பட்டாள். ஒரு அரசு சார்பற்ற அமைப்பு இதில் தலையிட்டு அப்பெண்ணுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுத்தது. எப்படி இருப்பினும் ஸ்மாட் சேட் நிறுவனத்தாரோ, அப்பெண்ணின் கண்களில் பிறப்பிலிருந்தே குறைபாடு இருந்ததாக வாதிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திறந்த பொருளாதார அமைப்பு முறை நமக்கு வழங்கிய சுதந்திர வர்த்த வலயங்களில் நாளாந்தம் நடைபெறும் அநீதிகளும் அடக்குமுறைகளும் ஏராளம். அவற்றில் ஒன்று இரண்டே மேற் கூறியவையாகும். நமது தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சும் பல்தேசிய கம்பனிகளுக்கு கொண்டாட்டம். ஆனால் தொழிலாளர்களின் வாழ்க்கைதான் அதளபாதாளத்தில்.

## அடுத்த இதழில் நூல் விமர்சனம்

*''மக்கள் திரளொன்று தமக்கிடையே நிலவுகின்ற ஏதேனும் பொது அடையாளத்தின் கீழ் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து தமக்கெனத் தனியான அரசியல் அதிகார அலகைக் கோரும்போது அவர்கள் தேசமாக அமைகின்றார்கள் என்பதே நவீன புரிதலாகும்'' மேற் கூறப்பட்டுள்ள ''நவீன புரிதலை'' மையமாகக் கொண்டு விக்ரம் என்பவரால் எழுதப் பெற்ற ''மூன்றாவது மனிதன்'' வெளியீடாக வெளிவந்துள்ள 'முஸ்லீம் தேசமும் எதிர்காலமும்' என்னும் நூலுக்கான விமர்சனம் புதிய பூமியின் அடுத்த இதழில் வெளிவரும்*

ஆ-ர்

## கிழக்கில் :
# படையினரும் பாலியல் வல்லுறவுகளும் மீண்டும் ஒரு பெண் பலி!

உலகில் எந்தவொரு யுத்தமும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் கொண்டு வருவது போன்று பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளையும் தாராளமாகக் கொண்டுள்ளன. நமது நாடு பௌத்த நாடு என்றும் உலகின் முதலாவது பெண் பிரதமரும், பெண் ஜனாதிபதியும் நமது நாட்டில் தான் தோன்றினார்கள் என்றும் பெருமை பேசுபவர்கள் இருக்கிறார்கள். அத்தகைய பெண்களைப் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் மட்டுமன்றி ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாகவும் கொண்ட இன்றைய ஆட்சியில் தான் பெண்கள் பாதுகாப்புப் படையினரின் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகி இறுதியில் கொன்றும் புதைக்கப்படுகின்றனர். தொடரப்படும் யுத்தம் பாதுகாப்புப் படையினரின் இழிவான பாலியல் வல்லுறவுகளுக்கு தகுந்த களமாகி நிற்கிறது.

கடந்த மே மாதம் 17 ம் திகதி கிழக்கிலங்கையில் படுபாதகமான வகையில் ஓர் குடும்பப் பெண் பொலிசாரால் மிருகத்தனமாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு அம்பாறை எல்லையில் அமைந்துள்ள கிராமம் சென்றல் காம்ப் பதினொராம் கொலனிப் பகுதி என்பதாகும். இப்பகுதியில் 112 ம் இலக்கத்தையுடைய வீட்டில் முருகேசபிள்ளை குடும்பம் வசித்து வந்துள்ளது. முருகேசபிள்ளை - கோணேஸ்வரி தம்பதியினருக்கு நான்கு பிள்ளைகள். குடும்பப் பெண் கோணேஸ்வரிக்கு வயது 35 ஆகும். 17 ம் திகதி இரவு மேற்படி பெண் அப்பகுதியில் உள்ள பொலிசாரால் மாறி மாறி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டாள். அவ்வாறு செய்த காக்கி உடைதரித்த மனித மிருகங்கள் தமது வெறி தீர்ந்ததும் அப்பெண்ணை உயிருடன் விடவில்லை. கொலை செய்தது மட்டுமன்றி அதனைக் கூட மிருக வெறியுடனேயே செய்தும் உள்ளனர். அப் பெண்ணின் பிரதான பெண் உறுப்பில் கிரனைட் ஒன்றினைக் கட்டி வெடிக்க வைத்துள்ளனர். உடல் சிதறிய நிலையில் அப் பெண் கொல்லப்பட்டார். ஏற்கனவேயும் இவ்வாறான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் கிழக்கில் இடம் பெற்றுள்ளன என்ற போதிலும் மேற்படி சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. இக் கொடூரத்தைச் செய்த பொலீஸ்காரர்கள் தாய்மாருக்குப் பிள்ளைகளாகப் பிறந்தார்களா அல்லது ஏதாவது மிருகங்களுக்கு பிள்ளைகளாகப் பிறந்தார்களா? இவர்களுக்கு பெண் சகோதரிகள் இல்லையா? அல்லது மனைவிமார் கூட இல்லையா? அல்லது பெண்கள் மத்தியில் வளரவில்லையா? என்றே அப்பிரதேச மக்கள் ஆவேசப்படுகின்றனர்.

இவ்வாறு பாலியல் வல்லுறவுக்கும் கொலைக்கும் உள்ளான பெண் கோணேஸ்வரி எவ்வித மரண விசாரணை எதுவுமின்றிப் புதைக்கப்பட்டுள்ளார். கணவன் முருகேசபிள்ளை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும் அது எவ்வித கவனத்திற்கும் எடுபடவில்லை. பொலீஸ் தரப்பில் இட்டுக் கட்டியுள்ள கதை என்னவெனில் ஷெல் வீழ்ந்தே மேற்படி பெண் பலியாகினார் என்பதாகும். மிலேச்சத்தனமான இப்பாலியல் வல்லுறவும் கொலையும் பற்றி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பின்பும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

பாதுகாப்புப் படையினரைப் பொறுத்தவரை இப்பாலியல் வல்லுறவுச் சம்பவம் என்பது முதற் தடவையும் அல்ல முடிவானதொன்றும் அல்ல.

1971 ல் கதிர்காம அழகி என்றழைக்கப்படும் மன்னம்பேரி என்ற யுவதி பாதுகாப்புப் படையினரால் நிர்வாணமாக்கப்பட்டு வீதியால் அழைத்துச் செல்லப்பட்ட பின் புதைகுழி அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டாள். அன்றைய கதிர்காமச் சம்பவம் கைதடி கிருஷாந்தி ஊடாக இன்று கிழக்கில் கோணேஸ்வரி வரை மட்டுமல்ல எத்தனையோ பெண்களின் மீதான பாலியல் வல்லுறவாகவும் கொடுமைகளாகவும் வளர்ந்து சென்ற வண்ணமே இருக்கின்றன.

தொடரப்படும் யுத்தத்தைச் சாட்டாக வைத்து வடக்கிலும் கிழக்கிலும் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்களால் பெண்கள் பலியாக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே வடக்கில் இடம்பெற்ற இரண்டு பாலியல் வல்லுறவும் -கொலையும் வெளிக் கொண்டு வரப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டது. அதற்கெதிரான உணர்வலைகள் பல்வேறு மட்டங்களிலும் தோற்றுவிக்கப்பட்டன. அது வெளி உலகத் தாக்கத்தைக் கூட ஏற்படுத்தியிருந்தன. அவ்வாறு கிழக்கில் இடம் பெற்ற இப்பாலியல் கொடுமையினை மேலும் வெளிக் கொணர்ந்து அதற்கெதிரான மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் வெறுமனே பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் எதிர்பார்த்து இராது ஓர் பரந்த மக்கள் எழுச்சியைத் தோற்றுவிக்க வேண்டும். பெண்கள் பிரச்சினைகளைப் பெண்கள் மட்டுமே பேச வேண்டும் என்போர் சில புள்ளி விபரங்களுடன் அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை அச்சிட்டு விடலாம். அதற்கு அவ் அமைப்புகளுக்குத் தேவை உண்டு. ஆனால் பலியாக்கப்பட்டுள்ள கோணேஸ்வரி போன்று இன்னும் பல கோணேஸ்வரிகளுக்கு இதே கதி ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும். அதற்கு ஆற்ற வேண்டிய காரியங்கள் பல உண்டு. அவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பாதுகாப்புப் படையினர் யுத்தத்தின் மறைவில் நின்று நிகழ்த்தி வரும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக்கும் -கொலைகளுக்கும் எதிரான பரந்த மக்கள் எழுச்சி அலை ஒன்றினைத் தோற்றுவிக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே உடனடித் தேவையாகும்.

# வடக்கு முஸ்லீம்கள் தாயகம் திரும்புவது எப்போது?

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் 1990 ம் ஆண்டில் முஸ்லீம் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் விரட்டி வெளியேற்றப்பட்டனர். இது ஒரு வரலாற்றுத் துயர நிகழ்வு மட்டுமன்றி தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆழப் பதிந்த அவலட்சணமான வரலாற்று வடுவாகவும் அமைந்து விட்டது. இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களின் தொகை ஏறத்தாள ஒரு லட்சம் பேர் ஆகும். இவர்களில் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லீம் மக்கள் என்பது குறிப்பிடக் கூடியதாகும். அதேபோன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டத்தின் உட்பகுதிகள் உள்ளடங்கிய பகுதிகளில் இருந்தும் முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். இந்த மக்கள் தொகையில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே கணிசமான அளவு வியாபார முயற்சியில் ஈடுபட முடிந்தது. ஆனால் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது வீதமான முஸ்லீம் மக்கள் புத்தளம் அனுராதபுர மாவட்டங்களில் செறிவாகவும் கொழும்பு மாவட்டத்தில் ஆங்காங்கும் சிதறி வாழுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களுக்கு கிடைத்தது முகாம் வாழ்க்கையும் அரசாங்கத்தின் நிவாரணமான முன்நூற்றி ஐம்பது ரூபா பெறுமதியான உலர் உணவும் தான். முகாம்களில் அடைபட்ட வாழ்க்கை தொடர்கிறது. அவர்களைச் சூழ்ந்துள்ள பொருளாதார சமூக அவலங்கள் எதுவும் குறைவடையவில்லை. கடந்த ஏழு ஆண்டுகளில் அவர்களது சமூக வாழ்க்கை சீர்குலைந்து சின்னா பின்னப்பட்ட நிலையில் வெறும் மனிதர்களாக ஏனோ தானோ என்ற ஏக்கம் நிறைந்ததாகவே இன்றும் இருந்து வருகின்றது. இந்த வடபுலத்து முஸ்லீம் மக்கள் மீதும் எத்தகைய பொறுப்புள்ள அரசியல் சமூக சக்திகளும் நேர்மையான அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. ஏதாவது தேர்தல்களில் அம் மக்களின் வாக்குகள் எத்தனை என்று கணக்கு வைத்துக் கொண்டு அதற்காகச் சென்ற அளவிற்கு உண்மையான அரசியல் சமூக பொருளாதார அக்கறையுடன் முஸ்லீம்கள் பற்றிக் குரல் எழுப்புபவர்கள் எவரும் வடபுல முஸ்லீம்களிடம் செல்லவில்லை. அதேவேளை வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதன் ஊடாக பல பயன் உள்ள பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமையைக் காண முடிகிறது. வடபுலத்து இடம் பெயர வைக்கப்பட்ட முஸ்லீம் மக்கள் அநாதரவானவர்கள் அல்ல என்பதை இவ் அமைப்பு பெருமளவிற்குப் பிரதிபலித்துள்ளது. திட்டவட்டமான ஆய்வுகளிலும் குறிப்பான கோரிக்கைகளிலும் அவ் அமைப்பு மிக நிதானமான கருத்துக்களை வற்புறுத்தி வருகின்றவை கவனத்திற்குரியதாகும்.

வடபுலத்து முஸ்லீம்களின் தாயகம் வடக்கு என்பதும் அவர்கள் தமது பாரம்பரிய இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்வது அவர்களது அடிப்படை உரிமை மட்டுமன்றி ஆழ்ந்த அபிலாஷையாகவும் இருந்து வருகின்றது. அவர்கள் தமது மீளக் குடியமர்வை நாளாந்தம் எதிர்பார்த்தே நிற்கிறார்கள். தாம் வாழ்ந்த மண்ணிலும் தம் கூட வாழ்ந்த தமிழ்ச் சகோதரர்களுடனும் வாழவே துடிக்கிறார்கள். வடபுலத்து முஸ்லீம்களும் தமிழர்களும் எவ்விதமான பெரும் முரண்பாடுகளோடும் தகராறுகளோடும் வாழ்ந்தவர்கள் அல்லர். புரிந்துணர்வோடும் சகோதரப் பண்போடும் வாழ்ந்தவர்கள். இன்று ஏழு ஆண்டுகள் பிரிந்து துன்ப துயரங்களுடன் முஸ்லீம் மக்களும் தமிழ் மக்களும் வாழ்ந்து வரும் சூழலிலும் கூட ஒருவர் மீது ஒருவர் அனுதாபத்துடனும் அக்கறையுடனும் தான் இருந்து வருவதைக் காணமுடிகிறது. அரசியல் அதிகாரத் தவறுகளால் அந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் ஒவ்வொரு அம்சமும் உணரப்படும் சூழல் தோன்றியுள்ளது.

இந்நிலையிலே வடபுலத்து முஸ்லீம் மக்கள் மீளக் குடியமரும் முனைப்புகள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. ஆனால் இம் மீளக் குடியமர்வு என்பது அவசரத்தில் செய்து முடிக்கக் கூடியதொன்றல்ல. மிக நிதானமாகவும் நீண்ட காலநோக்கில் இருந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுமாகும். வடபுலத்திற்கு தமது தாயக இருப்பிடத்திற்குச் செல்வது என்பதில் இருகருத்துக்கு இடமே இருக்க முடியாது. ஆனால் அந்த இலக்கை அடைவதற்கு தெளிவாக்கிக் கொள்ள வேண்டிய முற்காரியங்களில் பல செய்யப்பட வேண்டும். அந்த வகையில் வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பு முன்வைத்துள்ள மீளக்குடியமர்வு பற்றிய கருத்துக்கள் பயன் உள்ளவையும் ஆழ்ந்த பரிசீலனைக்கும் உரியவையாகும்.

எனவே வடபுலத்து முஸ்லீம்கள் ஒன்றுபட்ட ஒரே குரலில் தமது எதிர்காலத்திற்கான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய சூழல் இன்று உள்ளது. புலிகள் இயக்கம், அரசாங்கம் குலைக்கப்பட்ட இருப்பை உறுதியான அடித்தளத்தில் மீளக் கட்டியெழுப்புதல் ஆகிய அம்சங்களில் வரையறுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தெளிவாக முன்வைத்து அவற்றுக்குரிய தீர்வையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொண்ட ஒரு சூழலில் வடபுலம் நோக்கிச் செல்வதே வடபுல முஸ்லீம்களுக்கு தூரநோக்கில் பயன்கள் பல பெறக் கூடியதாக இருக்கும்.

எஸ்.எஸ்.ஆர்.இஸ்மாயில்

## புத்தளம் மாவட்டம் புறம்போக்கு நிலமா?

அரசாங்கம் புத்தளம் மாவட்டத்தை புறம்போக்கு நிலமாகப் பிரகடனம் செய்து விட்டதா? மீண்டும் மீண்டும் அம்மாவட்ட மக்களுக்கு சோதனையும் வேதனையும் தரும் வகையிலான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவது ஏன்? ஏற்கனவே புத்தளம் சீமெந்து ஆலை தூசி கக்கி நிற்கிறது. மனிதர்களும் மரம் செடிகளும் பயிர் பச்சைகளும் சீமெந்து தூசினால் மூடப்பட்டுள்ளன. இது போதாது என்று வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வின் ஒலிபரப்புக்கு என ஆயிரம் ஏக்கர் அளந்து கொடுக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் ஏராளம். அதற்கு மக்கள் காட்டி வந்த எதிர்ப்பு கவனத்தில் கொள்ளப்படவில்லை. அது அப்படியே இருக்க தற்போது அனல் மின்நிலையம் உருவாக்க கற்பிட்டி நுரைச்சோலையில் முன்நூறு ஏக்கர் நிலம் ஆளாக்கப்படுகிறது. நிலக்கரியை எரித்து அதன் மூலம் அனல் மின்சாரம் பெறுவதே திட்டமாகும். இதனால் நிலக்கரித் தூசி மேலும் அப்பிரதேசத்தை மூடப்படப் போகிறது. இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்டிய போதிலும் அதனைத் துப்பாக்கி முனையில் அடக்கிவிட எத்தனிக்கப்படுகிறது. எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது ஏற்கனவே துப்பாக்கிச் சூட்டை பொலீஸ் நடத்தியுள்ளது. அதில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் பலர் காயங்கள் அடைந்தனர். இத்துப்பாக்கிச் சூட்டிற்கு உத்தரவிட்ட உயர் பொலீஸ் அதிகாரி தனது பழைய வீரதீரத்தை வெளிப்படையாகவே கூறி மக்களைப் பயமுறுத்தியுள்ளார். 1989 ஆம் ஆண்டில் தான் இரு நூறுபேர்களை அழித்தொழித்தாகவும் மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்தால் தொடர்ந்தும் சுட்டுத்தள்ள உத்தர விடுவேன் என்றும் திமிராகக் கூறியுள்ளார் என அறிய முடிகிறது. இவ்வாறு துப்பாக்கி முனையில் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி நுரைச்சோலைப் பிரதேசத்தில் அனல் மின் நிலையம் அமைப்பது தான் ஐக்கிய முன்னணி அரசின் கொள்கையா என்றே மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

1ம் பக்கத் தொடர்ச்சி

## இ.தொ.கா - ஐ.தே.க ......

முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்பதில் ஒத்த கருத்துடனேயே இருக்கின்றன.

தொழிலாளர்களினதும் ஏனைய தொழிற்சங்கங்களினதும் எதிர்ப்பினாலேயே இன்னும் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாதிருக்கிறது.

இ.தொ.கா வும், இ.தே.தோ.தொழிலாளர் சங்கமும் தொழிலாளர்களுக்கான சங்கங்களாக இருந்தாலும் தொழிலாளர்களின் உரிமைகளை விட தோட்ட சொந்தக்காரர்களின் அல்லது தோட்டக் கம்பெனிகளின் உரிமைகளை பாதுகாப்பதிலேயே அக்கறை கொண்டிருக்கின்றன. அவ்விரண்டு தொழிற்சங்கங்களின் தலைமைகளினதும் முதலாளிவர்க்க விசுவாசம் ஒருபோதும் குறையப் போவதில்லை.

அச்சங்கங்கள் அவற்றின் சொந்த அரசியல் லாபங்களை முதன்மைப்படுத்தியே செயற்பட்டு வந்துள்ளன என்பதை தோட்டத் தொழிலாளர்கள் அறிவார்கள். அதனாலேயே சச்சிதானந்தனின் பதவிப் பறிப்பு விடயத்தை தோட்டத் தொழிலாளர்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அப்பிரச்சினையை மலையக மக்களின் பிரச்சினையாக ஒருவருமே கருதவில்லை. அது இரண்டு சங்கங்களிடையேயான, இரண்டு கட்சிகளுக்கிடையேயான பிரச்சினையாகக் கருதுகின்றனர்.

மலையக தமிழ்கல்வி அமைச்சு இருந்தும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான்.

இ.தொ.கா விற்கும், ஐ.தே.க.வுக்கும் எதிரான ஆசிரியர்கள் அதிபர்களை தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்வதையே பிரதான கடமையாக கொண்டிருக்கும். மலையகத்திலுள்ள மாகாண தமிழ் கல்வியமைச்சுகளினால் மலையக கல்வி வளர்ச்சிக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் இதற்கு சான்றாகும்.

சச்சிதானந்திடமிருந்து தமிழ்கல்வி அமைச்சுப் பறிக்கப்பட்டாலும் உல்லாசப் பயண, வர்த்தக அமைச்சை தொடர்ந்து ஏற்றுக் கொள்வதில் சச்சிதானந்தனோ இ.தொ.காவோ தயக்கம் காட்டவில்லை. தமிழ் கல்வி அமைச்சுப் பறிப்பு மலையக மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கை என இ.தொ.கா.நம்புவதாக இருந்தால் ஏனைய அமைச்சுகளை சச்சிதானந்தன் ஏற்க மறுத்திருக்கலாம். அவர் ஏனைய அமைச்சுகளை ஏற்றுக் கொண்டதிலிருந்து அது இ.தொ.கா. ஐ.தே.க உள்விவகாரமாகவே தெரிகிறது.

இது இவ்வாறிருக்க தொண்டமானாலும் இ.தொ.காவாலும் ஐ.தே.கட்சியிடம் சாதிக்க முடியாததை ஐ.தே.கட்சியின் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள மலையக தமிழர்களால் சாதிக்க முடியுமா என்பதை சிந்தித்து பார்க்க இது தக்க தருணமாகும்.

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு மட்டுமன்றி மத்திய மாகாண தமிழ்கல்வி அமைச்சும் கூட பறிக்கப்படலாம். எதிர்காலத்தில் தமிழ் கல்வி அமைச்சுகள் இல்லாமலாக்கப்படலாம். இவற்றை செய்ய ஐ.தே.கட்சி தயங்காது.

1ம் பக்கத் தொடர்ச்சி

## புலிகள் முதல் ......

பட்டம் சூட்டும் வேலையைக் கைவிடுவதாக இல்லை. நண்பர்களை இழந்து விரோதிகளை அதிகரிக்கும் அதன் போக்கு நீடித்துச் செல்கின்றது. இவையும் அரசிற்கு எந்தநிலையிலும் சாதகமானதாகக் காணப்படுகின்றது. தமிழர் கூட்டணி இழந்து போன செல்வாக்கை எப்படிப் பெறலாம் என்பதிலேயே குறியாக இருந்து வருவதுடன் அரசுடன் எல்லோரை விடவும் ஒட்டி உறவாடி நிற்கிறது. தமிழ்க் காங்கிரஸ் தற்போது திரும்பிச் சென்று திம்புக் கோரிக்கைகளைக் கையில் எடுத்து எல்லோரை விடவும் தானே மானமுள்ள உண்மைத் தமிழன் என நிரூபிக்க முற்பட்டு நிற்கிறது. மலையக மக்கள் முன்னணியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் பாராளுமன்றத்தில் பதினொரு ஆசனங்களைக் கொண்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் ஊடாக மலையக மக்களுக்கு ஒரு சிறு துரும்பைக் கூடப் பெறமுடியாத பரிதாபகரமான நிலையிலே இருந்து வருகின்றன. ஒட்டுமொத்தத்தில் வடக்கு கிழக்கு மலையகத் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஏன் அரசாங்கத்தின் இணைந்தோம் ஆதரவு கொடுத்து வருகின்றோம் என்பதைப் பற்றிய கேள்வியைத் தமக்குள் எவ்வகையிலும் எழுப்பிக் கொள்ளாத வகையிலேயே இருந்து வருகின்றன. அப்படி ஒரு அர்த்தமுள்ள வினாவை அவர்கள் எடுக்க முடிந்தால் குறைந்தபட்சமாவது இத் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்த செயற்பாட்டிற்கு வந்திருக்க முடியும்.

அன்று தமிழர் கூட்டணி தமிழீழக் கோரிக்கையைத் தூக்கிய போது நீண்டகாலத்தில் அது ஏற்படுத்தப்போகும் எதிர் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் பாராளுமன்ற ஆசனங்களின் வெற்றியை மட்டும் பார்த்துக் கொண்டனர். அதேபோன்று ஆயுதம் ஏந்திய தீவிரவாதத் தமிழர் இயக்கங்களும் எதற்காக ஆயுதம் ஏந்துகிறோம் என்பதையிட்டு தெளிவான கொள்கை கோட்பாட்டுடன் இருக்கவில்லை. பின்பு ஆயுதங்களைக் கைவிட்ட வேளையிலும் எதற்காக அதனை விடுகின்றோம் எந்த வழியில் எப்படிச் செயல்படப் போகின்றோம் என்பதிலும் தெளிவுடையவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்ளவில்லை. அவர்களுக்கு நிர்ப்பந்தம் ஒருபுறம் என்றால் கொள்கை கோட்பாட்டுத் தெளிவின்மை மறுபுறம் என்றே கூறலாம்.

எது எவ்வாறாயினும் வடக்கு கிழக்கு மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு நெருக்கடி உச்சநிலைக்குச் சென்றுள்ள இக்கட்டான நிலையே காணப்படுகிறது. விபரிக்க முடியாத துன்பத்தில் ஆழ்ந்துள்ள இம்மக்களையிட்டு இத்தமிழ் கட்சிகள் ஏன் ஒருமுகமான நிலைப்பாட்டிற்கு வரமுடியாது உள்ளன என்பதே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் ஆதங்கமாகும். போர் முனையிலே நிற்கும் புலிகளாயினும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தமிழ்க் கட்சிகளாயினும் தமிழர்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு ஒன்றுபட்டு குறைந்தபட்சமாவது ஒரே குரலில் பேச முன்வரல் வேண்டும் என்பதே அழிவுற்றுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் அவாவாகும். அதனை எந்தளவிற்கு தமிழ்க் கட்சிகள் காதில் வாங்கிக் கொள்ளப் போகின்றன என்பது கேள்வியாகும். உரியவாறு திட்டமிட்ட வகையில் தமிழ்க் கட்சிகள் தம்மை மறுசீரமைத்துக் கொண்டு தமிழர் உரிமைகளுக்காக நேர்மையுடன் செயல்பட மறுத்தால் அவர்களது அரசியல் எதிர்காலம் விரைவில் அஸ்தமித்துக் கொள்ளும். முன்னைய தலைமைகள் போல் வாயில் தமிழர் உரிமையும் வாழ்க்கையில் வர்க்க சுகபோக நிலைப்பாடும் என்ற அடிப்படை உண்மையை மீண்டும் நிரூபித்தவர்களாவார் என்ற நிலையே தோன்றும். அப்போது வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் புதியதோர் மூன்றாவது அரசியல் சக்தி வளர்ச்சி பெற்று தேசிய இனவிடுதலையை உரிய பாதையில் வழிநடாத்திச் செல்லும் நிலைக்கு வளரவே செய்யும். இந்த வளர்ச்சியை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் அது அழிவுகளிலும் தோல்விகளிலும் இருந்து பெறப்பட்ட வரலாற்று அனுபவங்களின் ஊடே முன் செல்லும் ஒன்றாகவே இருக்கும். அது பேரினவாத இராணுவ ஒடுக்கு முறைகளுக்கு எதிரான தமிழ் முஸ்லீம் மலையக மக்களை ஒன்று திரட்டுவதுடன் உழைக்கும் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறக் கூடிய சூழலையும் தோற்றுவிக்கும் ஒன்றாகவே அமையும்.

17 JUL 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI

## பல்கலைக்கழக நிர்வாகம்: தனியார் கம்பனிகளிடம்?

பல்கலைக்கழகங்களில் பராமரிப்பு, நிர்வாகம், முகாமைத்துவம் என்பவற்றை தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைப்பது பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. பல்கலைக்கழக நிர்வாக சேவையிலுள்ளவர்கள் ஒரு மாதத்திற்கு மேலாக நடத்திய வெற்றிகரமான வேலை நிறுத்தத்திற்குப் பிறகு அரசாங்கம் பல்கலைக்கழக நிர்வாக சேவை, பராமரிப்பு சேவை, முகாமைத்துவ சேவைகளைத் தனியார் கம்பெனிகளிடமிருந்து பெற்றுக் கொள்வது பற்றி மிகவும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

பல்கலைக் கழக நிர்வாகசேவை முகாமைத்துவ சேவைகளை தனியார் கம்பனிகளிடம் ஒப்படைத்தால் பல்கலைக் கழக நிர்வாகம், பராமரிப்பு, முகாமைத்துவம் என்பவற்றுக்காக செலவிடும் தொகையைக் குறைக்கலாம் என்று உலக வங்கி 1994இல் சிபாரிசு செய்திருந்தது. தற்போது பல்கலைக் கழக நிர்வாக பராமரிப்பு, முகாமைத்துவ சேவைகளில் மேலதிகமானவர்கள் தொழில் புரிவதாலும் அவர்களுக்கு அதிகமான சம்பளம் வழங்கப்படுவதாலும் அச் சேவைகளைத் தனியார் கம்பெனிகளிடமும் ஒப்படைத்தால் குறைந்த தொகையானவர்களை வேலைக்கமர்த்தி குறைந்த சம்பளத்தைக் கொடுத்து செலவைக் குறைக்க முடியும் என்று உலக வங்கி சிபாரிசு செய்திருந்தது.

'அரசாங்கம் கொடுக்கின்ற மானியங்களிலேயே பல்கலைக் கழகங்கள் நடத்தப்படுகின்றன. அம்மானியங்களில் 75 சதவீதம் பராமரிப்புக்கும், நிர்வாக சேவைக்கும் செலவிடப்படுகின்றது. நிர்வாக சேவைகளில் தேவைக்கு மேலதிகமானோர் நியமனம் பெற்று வேலை செய்கின்றனர். அதனால் இப் பாதிப்புக்களை இல்லாமல் செய்யும் வகையில் பல்கலைக்கழக நிர்வாகம், பராமரிப்பு சேவைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும்' என்று பல்கலைக்கழக கல்வி பற்றிய தேசியக் கொள்கை என்ற அறிக்கையை சமர்ப்பித்துள்ள பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையின் சிபாரிசு உலக வங்கியின் (சிபாரிசு அல்ல) கட்டளை என்பவற்றின் அடிப்படையில் மட்டுமன்றி அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் தாக்கத்தினாலும் பல்கலைக்கழக நிர்வாக சேவை, பராமரிப்பு சேவை என்பவற்றை தனியார் கம்பெனிகளுக்கு வழங்குவது பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசித்து வருகிறது.

இது இலவசக் கல்வியை பறிப்பதற்கான ஆரம்ப முயற்சியாகும். இலவசக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சேவைத் துறையான பல்கலைக் கழகங்களை நட்டமில்லாமல் நடத்த வேண்டுமென்றோ, லாபமாக நடத்த வேண்டுமென்றோ யாராவது சொன்னால் அதன் அர்த்தம் என்ன?

புதிய தேசியக் கல்விக் கொள்கையை வகுப்பது பற்றி அதிகமாகவே ஜனாதிபதி முதல் அரசாங்கத்திலுள்ள அனைவரும் பேசி வருகின்றனர். இலங்கையின் கல்வி முறையில் பாரிய மாற்றங்களை செய்ய வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூடக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் இப்படி பேசுவதால் எல்லோருக்கும் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் நாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய தொழிற் கல்வி பாடத்திட்டங்கள் அமுலுக்கு வருமென்றும் இலவசக்கல்வி நிலைத்திருக்குமென்றும் மக்கள் நினைக்கின்றனர்.

ஆனால் தேசியக் கல்விக் கொள்கையை பூரணமாக வகுத்து முடிப்பதற்குள் பல்கலைக் கழக நிர்வாக, பராமரிப்பு சேவைகளை தனியாரிடம் கையளிப்பது என்று யோசிப்பது இலவசக் கல்வியை ஒழிப்பதற்கான தேசியக் கல்விக் கொள்கையே வகுக்கப்படவுள்ளது என்பதை தெளிவாக்குகிறது.

சமூக சேவைகளை உறுதி செய்யும் அரசுகள் இருக்கக்கூடாது என்பது உலக வங்கியின் விருப்பமாகும் அதனடிப்படையில் அரசுகள், ஒன்றையுமே மக்களுக்கு இனாமாக வழங்கக்கூடாது என்பதையே அது வலியுறுத்தி வருகிறது. சமூக சேவை அரசொன்றில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என்பன லாபநோக்கில் வழங்கப்பட முடியாத சேவைகளாகும். பல்கலைக் கழக நிர்வாகம், பராமரிப்பு என்பவற்றில் இருக்கும் வீண்விரயம், மோசடி, ஊழல் என்பவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு அச்சேவைகளைத் தனியாரிடம் ஒப்படைப்பது என்பது சேவை துறையை ஒழிக்கும் நடவடிக்கையே ஆகும்.

நிர்வாகமும், பராமரிப்பு கையளிக்கப்படுவது போன்று விரிவுரையாளர்களை தேர்ந்தெடுப்பதும் தனியாரிடம் கையளிக்கப்படலாம். பிறகு மாணவர் தேர்வும் கையளிக்கப்படலாம். மாணவரிடம் கட்டணம் அறவிடப்படலாம். அப்படி மெல்லமெல்ல எல்லாமே பறிக்கப்பட்ட பின்னர் இலவசக் கல்வி என்பது கடந்தகால வரலாறாக மட்டுமே இருக்கும்.

## பாராளுமன்ற சுகபோகங்களில் திளைக்காத அரசியல்வாதி தகநாயக்கா

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதிக காலம் உயிர் வாழ்ந்த இரண்டு அரசியல் தலைவர்களைக் குறிப்பிட முடியும். ஒருவர் ஜே.ஆர். மற்றவர் அண்மையில் காலமாகிய கலாநிதி டபிள்யூ.தக–நாயக்கா. ஆனால் இவ் இருவரும் ஒத்த பண்புடைய அரசியல்வாதிகள் அல்லர் என்பது குறிப்பிடக் கூடியதாகும். ஜே.ஆர். ஆளும் சொத்துடைய வர்க்கத்தின் நலன்களுக்காகவும் இலங்கையின் பேரினவெறி கொண்டவர்களினதும் நம்பிக்கைக்குரிய தலைவராக இருந்து இறுதிவரை அவர்களுக்கே சேவை செய்து மறைந்தவர். ஆனால் தகநாயக்கா சாதாரண மக்களுக்குத் தன்னாலான சேவைகளைச் செய்து மக்கள் மனங்களில் தனியான ஓர் இடத்தை இடம் பிடித்து வைத்து மறைந்தவர்.

தகநாயக்கா சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் மொத்தம் 48 ஆண்டுகள் மக்கள் பிரதிநிதியாக இருந்தவர். உறுப்பினராக மந்திரியாக மட்டுமன்றி குறுகிய மாதங்கள் பிரதம மந்திரியாகவும் கடமை புரிந்தவர். அவர் ஆடம்பரத்தை வெறுத்து மிக எளிமையான அரசியல் வாழ்க்கை வாழ்ந்தவர். பாராளுமன்றம் அளித்த சலுகைகள் வசதிகளை அவர் அனுபவித்துக் கொண்டமை கிடையாது. பாராளுமன்ற பதவியைப் பயன்படுத்தி தமது சொந்த வாழ்க்கையையும் சொத்துடைமைகளையும் பெருக்கிக் கொண்ட சராசரி அரசியல்வாதிகளோடு ஒப்பிடும் போது தகநாயக்கா ஒப்பிடமுடியாத சேவையாளனாகத் திகழ்ந்தார். எளிமை, சேவை கடும் முயற்சி போன்றவற்றின் மூலம் அவர் சாதாரண மக்களின் பிரச்சினைகளை எப்பொழுதும் சுமந்து செல்பவராகக் காணப்பட்டார்.

கொலனித்துவ காலத்தில் அந்நிய ராட்சிக்கு எதிராக செயல்பட்டு வந்த தகநாயக்கா இலங்கையின் புகழ்பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமான சூரியமல் இயக்கத்தில் சேர்ந்து சமசமாஜக் கட்சி உறுப்பினராகவும் இயங்கினார். இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தின் தொழிற் சங்க இயக்கமான இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் முதலாவது தலைவராக தகநாயக்கா விளங்கினார். இயல்பாகவே மக்கள் நலன்கள் மீது அக்கறையும் அனுதாபமும் கொண்ட அரசியல்வாதியான தகநாயக்கா இலங்கையின் பிரதான கட்சிகளில் அங்கத்துவம் பெற்று அவ்வப்போது பாராளுமன்றம் சென்றிருக்கிறார். இருப்பினும் அவர் தனக்கென ஒரு தனித்துவமான சேவை வாதம் கொண்ட அரசியல் மார்க்கத்தில் இதுவரை தன்னை நிலைநிறுத்தி வைத்து வந்துள்ளமை தான் அவருக்குரிய சிறப்புத் தகமையாகும்.

அவர் இலங்கையின் நாற்றமெடுத்து நின்ற இனவாத - பேரினவாதச் சேற்றுக்குள் தனது கால்களை வைத்தது கிடையாது. சிங்கள மக்களின் மொழி, கலாச்சாரம் என்பன அந்நியராட்சினரால் அமுக்கப்பட்டதை எதிர்த்து அவற்றுக்குரிய இடம் மீட்கப் படுவதை ஆதரித்தும் வந்தவர். ஆனால் அதனைத் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத நோக்கில் நோக்கப்படுவதை எதிர்த்தும் வந்தார். இனப்பிரச்சினை சார்பாக அவர் கொண்டிருந்த நேர்மையான கருத்துக்கள் ஒரு ஜனநாயகவாதியின் கருத்தாகவே அமைந்திருந்தன. அவரது இனவாதமற்ற அன்றாட செயல்களுக்கு அவரது சிங்கள தமிழ் நண்பர்கள் பல்வேறு விடயங்களைச் சுட்டிக் காட்டுவர். 1948ம் ஆண்டில் பிரசாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு இந்திய வம்சாவழி மக்களின் குடியியல் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அதனை எதிர்த்து அன்றைய இலங்கை இந்தியன் காங்கிரஸ் பாராமன்ற வளவில் தொடர் சத்தியாக்கிரகம் செய்து வந்தது. அவ்வேளையில் தகநாயக்கா அடிக்கடி அங்கு வருகை தந்து சத்தியாக்கிரகிகளுக்கு ஆறுதலும் அனுதாபமும் கூறி இளநீர் தண்ணீர் தேனீர் வழங்கி வந்தமையை அக்காலத்தவர் ஒருவர் அண்மையில் நினைவு கூர்ந்தமையைக் கேட்க முடிந்தது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பாராளுமன்ற உறுப்புரிமையானது இடதுசாரிகள் எனப்படுவோரைக் கூட இடறி வீழ்த்தி அதன் சுகபோகங்களை அனுபவிக்க வைத்துள்ளது. ஆனால் இறுதிவரை அச் சுகபோகங்களை எல்லாம் உதறித் தள்ளி விட்டு தன்னாலான அரசியல் சமூக சேவைகளை தகநாயக்கா என்ற மனிதனால் செய்ய முடிந்துள்ளமை தான் அவரை நினைவு கூர வைத்துள்ள சிறப்பு அம்சமாகும்.

## எங்கள் பிள்ளைகளை எங்களிடம் தாருங்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து உருக்கமான வேண்டுகோள்.

எங்கள் அன்புக்குரிய பிள்ளைகள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை எவ்விதத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. கைதானவர்களின் பெயர்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுமில்லை. இதனால் நாம் மிகுந்த மன உளைச்சலுடன் உள்ளோம். எங்கள் பிள்ளைகள் என்ன மனநிலையில் இருக்கிறார்கள் என்பது பற்றி எதுவுமே தெரியவில்லை. கைதான எமது பிள்ளைகள் பற்றி எவ்விதத் தகவலும் பெற முடியாத நிலையில் நாம் எவ்வளவு அந்தரித்த நிலையில் வாழ்கிறோம் என்பது பற்றி இரு பிள்ளைகளின் தாய் என்ற வகையில் நீங்கள் நன்கு உணர்வீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.

இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களில் பாடசாலை மாணவர்கள், அரசாங்க, தனியார் பணியாளர்கள் மற்றும்பலர் அடங்குகின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் சுமார் 800 பெற்றோர்கள் உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்க்கைக் காலம் குறைக்கப்பட்டு அர்த்தமற்றதாகி விட்டது. ஆகக் குறைந்தது எங்களது பிளளைகளுடன் கடிதத் தொடர்பை வைத்திருக்க வேனும் அனுமதி வழங்குங்கள்.

தமிழர் என்ற வகையில் இந்த அரசாங்கம் எங்களுக்கு நன்மை செய்யும் என்று நம்பியும், கருதியும அதற்கான ஒத்துழைப்பை எங்களால் முடிந்த வரை உதவினோம். உலகத்தில் உள்ள பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழ்வது போல் எங்களது பிள்ளைகளையும் எங்களுடன் வாழ உங்களாலான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என நம்புகிறோம். எங்கள் பிள்ளைகள் தங்கள் பாடசாலை நாட்களிலும் பணிகளுக்கு சென்ற நாட்களிலும் இராணுவத் தடைமுகாம்களில் எமது கண் முன்னாலேயே கைது செய்யப்பட்டனர். அவர்கள் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபட்டதில்லை.

மேற்கூறப்பட்டவற்றை உள்ளடக்கிய நெஞ்சை நெகிழ வைக்கும் ஒரு மகஜரை வடபுலத்தில் காணாமல் போனோரின் பாதுகாவலர் சங்கம் என்னும் அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வருட காலத்தில் அதாவது குடாநாட்டை ராணுவம் கைப்பற்றிய காலம் முதல் இதுவரை 80க்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என இவ்வமைப்பு சுட்டிக்காட்டி நிற்கிறது. இவ்வமைப்பில் காணாமல் போனோரின் பெற்றோர், மனைவிமார், சகோதரர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவ்வமைப்பின் தூதுக்குழு ஒன்று விரைவில் கொழும்பு வந்து ஜனாதிபதியை நேரில் சந்திக்க அனுமதியை யாழ். அரச அதிபரின் ஊடாகக் கோரியுள்ளது. மாணவர்களை அழைத்து வந்து தென்னிலங்கை காட்டியவர்கள் அடுத்து விவசாயிகளை அழைத்து வந்து கொழும்பு காட்ட ஆயத்தங்கள் செய்வோர், தமது பிள்ளைகளை தவறவிட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அவலமாக இருந்துவரும் பெற்றோரின் பிரதிநிதிகளை இங்கு அழைத்து வந்து ஜனாதிபதி முன்னிலையின் தமது பிள்ளைகளின் நிலை பற்றி எடுத்துக்கூறி விடுவிக்க உதவுவார்களா? சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்.

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா, இல14, 57வது ஒழுங்கை, கொழும்பு -06, பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலி வீதி இரத்மலானை.